# அரசு ஊழியர்

**மாத இதழ்**

**2023 செப்டம்பர்**

**மலர்:44** **இதழ்:09**

**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக**

அச்சிட்டு வெளியிடுபவர்: **மு.அன்பரசு**

ஆசிரியர்: **ஆ.செல்வம்**

**ஆசிரியர் குழு:**
**மு.அன்பரசு, மு.பாஸ்கரன், தெ.வாசுகி, இரா. மங்களபாண்டியன், கோ.பழனியம்மாள், சி.பரமேஸ்வரி, சா.டானியல் ஜெயசிங், சா.கோதண்டபாணி, அ.குபேரன்**

**வரைகலை: கார்ட்டுன்வாசி**

**இதழ் வடிவமைப்பு: ஆர்.காளத்தி 9677003178**

**இதழ் ஒருங்கிணைப்பு: ஜிஜி**

**முகவரி:**
பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
மின்னஞ்சல் : arasuoozhiyar@gmail.com

**அச்சகம்:**
சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,
19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,
எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை,
சென்னை - 600002

**ஆண்டுச் சந்தா** : ரூ.200
**தனி இதழ்** : ரூ.20


இந்த இதழ் குறித்த தங்களின் மேலான கருத்துக்கள் விமர்சனங்கள் கதைகள், கட்டுரைகள், கவிதைகளை மேற்கண்ட முகவரிக்கு, மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும். தகுதியானவை பரிசீலிக்கப்பட்டு அரசு ஊழியர் இதழில் வெளியிடப்படும்.


இதழுக்கு அனுப்பும் கதைகள் கவிதைகள், கட்டுரைகள், கருத்துக்கள் விமர்சனங்களை பிரசுரிக்கவும், நிராகரிக்கவும், சுருக்கி வெளியிடவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு.


# உள்ளே...


1. **ஈட்டிகளை தீட்டி வைப்போம்! நெஞ்சில் தீ மூட்டி வைப்போம்!** தலைவர் மடல் ....4
2. **யாவும்... நாம் எழ வீழும்...** பொதுச் செயலாளர் மேசையிலிருந்து....7
3. **தனிமனித ஒழுக்க நியதிகள் பொது வாழ்க்கைக்கு பொருந்துவதில்லை!** ....10
4. **வேலையின்மை என்னும் அபாயம்** ....14
5. **தூர்** ....16
6. **இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அலுவலர் சங்கத்தின் மாநிலந் தழுவிய பெருந்திரள் முறையீடு இயக்கம்!** ....17
7. **எது உயர்வைக் கொடுக்கும்?**....18
8. **சேரிக்கு இன்னும் வரவில்லை தேர்!** ....19
9. **சத்துணவுத்திட்டம் சீர்குலைப்பும் சத்துணவு ஊழியர்கள் அலைக்கழிப்பும்** ....21
10. **மாவட்ட பிரதிநிதித்துவப் பேரவை** ....24
11. **காலை உணவுத்திட்டம் தமிழ் நாட்டின் கம்பீரம்!** ....28
12. **தமிழ்நாடு நில அளவை அலுவலர்கள் கோரிக்கைகள் ஒவ்வொன்றாக நிறைவேற்றப்படும்!** ....29
13. **வீறு கொண்டெழுந்த வருவாய்த்துறை அலுவலர்கள்** ....30
14. **கிராம சுகாதார செவிலியர்களை கணினி இயக்குநர்களாக மாற்றுவதை கைவிடுக!** ....33

# ஈட்டிகளை தீட்டி வைப்போம்! நெஞ்சில் தீ மூட்டி வைப்போம்!

பா.ஜ.கா. ஆட்சிக்கு வந்தால் விலைவாசியை குறைப்பபோம் ஊழலை ஒழிப்போம் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் வங்கிக் கணக்கிலும் தலா 15 லட்சம் பணம் போடுவோம் என்று சொன்னார் 2013ல் பிரதமர் வேட்பாளராக இருந்த மோடி. அவர் ஆட்சிக்கு வந்து 9 ஆண்டுகள் ஆகிவிட்டது. அப்போது 140 ரூபாய்க்கு விற்ற கேஸ் சிலிண்டர் இப்போது 1,150 ரூபாய். 67 ரூபாய்க்கு விற்ற பெட்ரோல் இப்போது 105 ரூபாய். சிலிண்டருக்கான மானியத்தை நேரடியாக வங்கியில் போடுவோம் என்று சொன்னதையும் போடாமல் நிறுத்தியிருக்கிறார்கள். அரிசி, பருப்பு, எண்ணெய், மிளகாய், தனியா என எல்லா அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலையும் ஏறியிருக்க மக்கள் வாழ்வதா சாவதா என்கிற இக்காட்டான நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தற்போது நாடாளுமன்றத் தேர்தல் வருவதை மனிதில் கொண்டு எரிவாயு சிலிண்டருக்கு ரூ.200 விலை குறைப்பு செய்யப்பட்டுள்ளது. எப்போதும்போல் மக்கள் ஏமாறுவார்கள் என்று.

ஆட்சிக்கு வந்தால் வருடத்தில் 2 கோடி பேருக்கு வேலை கொடுப்போம் என்று சொன்னவர் மோடி. இருந்த வேலையும் இல்லாமல் போய் கிடைத்துக் கொண்டிருந்த கொஞ்ச நஞ்ச வருமானமும் நின்று போனதுதான் மிச்சம். கருப்பு பணத்தையும் ஒழிக்கவில்லை ரூ 15 லட்சத்தையும் போடவில்லை. ஆனால் முதலாளிகளுக்கு மட்டும் கடன் தள்ளுபடி ஊக்கத்தொகை என எல்லாம் செய்கிறது மோடி அரசு.

மத்திய பட்ஜெட்டில் பணக்காரர்களுக்கு லட்சக்கணக்கான கோடியை சலுகைகளாக தள்ளுபடிகலாக வாரிக் கொடுத்துவிட்டு ஏழைகளுக்கு மட்டும் ஆப்பு மேல ஆப்பு வைக்கிறார்கள். நாடு முழுவதும் இருக்கிற 85 கோடி மக்களுக்கு ரேஷன் கடையில் இலவசமாக அரிசி கோதுமை வழங்க கொடுக்கப்பட்ட உணவு மானியத்தை 2.86 லட்சம் கோடியில் இருந்து இப்போது வெறும் 90 ஆயிரம் கோடியாக குறைத்திருக்கிறார்கள். 100 நாள் வேலைத்திட்டத்திற்கு நிதி குறைப்பு, விவசாய பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலையை கூட தர மறுத்தல், உரத்துக்கான மானியம் நிறுத்திவைப்பு போன்ற நடவடிக்கைகளும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. எதிர்த்து கேள்வி கேட்கும் பத்திரிகைகளை முடக்குவது பத்திரிகையாளர்களை சிறையில் தள்ளுவது சிபிஐ அமலாக்கத் துறை நீதித்துறை என எல்லாவற்றையும் அரசியல் ஆதாயத்திற்காக தவறாக பயன்படுத்துவது என்று பாஜக ஆட்சியில் அதிகார அக்கிரமங்கள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. கார்ப்பரேட் முதலாளிகளும், மதவெறி சக்திகளும் கள்ளக் கூட்டணி வைத்து, முதலாளிகளை எதிர்த்து கேள்வி கேட்காமல் இருக்க மதவெறியைத் தூண்டி மக்களை பிரிக்க பார்க்கிறது ஒன்றிய அரசு.

வேலை, கல்வி, மருத்துவம், தொழில் வளர்ச்சி போன்றவற்றை ஏற்படுத்த தவறியுள்ளதோடு, அமைதி மக்கள், ஒற்றுமை, மத நல்லிணக்கம் இவற்றைப் பற்றி பேசாமல் லவ் ஜிகாத், மாட்டுக்கறி, மசூதி மற்றும் நூலகத்தை கொளுத்துவது, பெண்களை நிர்வாணப் படுத்துவது போன்ற தரம் தாழ்ந்த அரசியலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது ஒன்றிய அரசும் அதன் கைப்பாவைகளும்..

ஒன்றியத்தில் தான் அப்படி என்றால் தமிழ்நாட்டின் நிலையோ வேறு மாதிரியாக உள்ளது மத்திய அரசின் சட்டங்களை எல்லாம்

மாநிலத்தில் நிறைவேற்றிவிட்டு இது ஒன்றிய அரசின் சட்டம் நாங்கள் ஒன்றும் செய்யமுடியாது என்று திராவிட அரசாங்கம் கூறுகிறது.

கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் தனக்கு நிகர் யாருமில்லை என்று சொன்ன தமிழக முதல்வர்தான் இன்று முகம் திருப்பிக் கொண்டிருக்கிறார். கொடுத்த வாக்குறுதிகளை ஒன்றைக்கூட நிறைவேற்ற வில்லையே என்று ஒவ்வொரு அரசு ஊழியரும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். பழைய ஓய்வூதிய திட்டத்தை திரும்ப கொண்டு வர வேண்டும் என்பதில் நம்மை விட அக்கறை இருந்தது எதிர்க்கட்சி தலைவராய் இருந்த ஸ்டாலின் அவர்களுக்கு. தான் எதிர் திசையில் இருந்த போது அவரது துடிப்பு வேகம் எதிர்ப்பு எல்லாம் ஆளுங்கட்சியான பின் எங்கே போனது என்றே தெரியவில்லை? அதை செயல்படுத்தாமல் இருந்ததோடு மட்டுமல்லாமல் நிதிநிலை அறிக்கையில் சட்டப்பேரவையில் தேசிய பென்ஷன் திட்டத்தில் தமிழக ஊழியர்களை சேர்க்க போவதாக வேறு அறிவிப்பு வெளியிட்டு அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களை சினங்கொள்ள வைத்துள்ளார்.

சென்னை மாதவரத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் நடத்திய 14ஆம் மாநில மாநாட்டில் முதல்வர் சொன்ன வார்த்தைகளை முகம் சுளிக்காமல் ஏற்றுக்கொண்டு அமைதியாக வீடு திரும்பியவர்கள்தான் நாம். தீவுத்திடலிலும், ஜாக்டோ ஜியோவின் வாழ்வாதார நம்பிக்கை மாநாட்டில், ''உங்கள் கோரிக்கைகள் உயிரோடு இருக்கின்றன.'' என்று உறுதிமொழி அளித்துவிட்டுச் சென்ற மாண்புமிகு முதல்வரின் வார்த்தைகளை தேவ வாக்காக ஒவ்வொரு அரசு ஊழியரும், ஆசிரியரும் ஏற்றுக்கொண்டு நிதி நிலைமை சீராக சீராக நம்முடைய கோரிக்கைகளை முதல்வர் நிச்சயம் தீர்த்துவைப்பார் என்று அசையாத ஒற்றை நம்பிக்கையில் இருந்தோம். நாட்கள் நகர...மௌனம் தொடர... முதல்வர் சொன்ன நம்பிக்கை வார்த்தைகள் ஆட்டம் கண்டுள்ளது. மாதங்கள் பல கடந்த பின்னும் நமது முக்கிய கோரிக்கைகளில் ஒன்றைக்கூட செய்ய முன்வராதது அவர் மீது வைத்திருந்த மாசற்ற நம்பிக்கை, மரியாதை சுக்குநூறாக நொருங்கியிருக்கிறது. ''மறக்கவுமில்லை, மறைக்கவுமில்லை, மறுக்கவுமில்லை.'' என்று சொன்ன முதல்வர் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் விஷயத்தில் இன்னமும் நீண்ட மௌனம் காப்பது மறுதலிப்புக்கு ஈடானதாகும். நடந்தவை எல்லாம் நடிப்பு, நயவஞ்சகம், நம்பிக்கைத் துரோகம் என்று முடிவுசெய்யும் நிலைக்கு அரசு ஊழியர்கள் ஆசிரியர்களை ஆளாக்கியுள்ளார்

பழைய ஓய்வூதியத் திட்டத்தை திரும்ப அமல்படுத்தக் கேட்டு பல அரசுகளிடம் கெஞ்சி, கூத்தாடி, வாதாடி, போராடி, கிட்டத்தட்ட 20 ஆண்டுகள் முடிந்துவிட்ட நிலையில் தான் முதல்வரானால் பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்துவேன் என்று நமக்கு உறுதிமொழி வழங்கிய திமுக தலைவர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், தான் முதல்வராகிவிட்ட பின்பும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு வாக்களித்தபடி பழைய ஓய்வூதியத் திட்டத்தை மீண்டும் அமல்படுத்த மறுத்து வருவது அதிர்ச்சி கலந்த ஆச்சர்யம்தான். பழைய ஓய்வூதியத் திட்டத்தை மீண்டும் கொண்டுவர இந்தியாவில் சில மாநிலங்கள் முன்வந்துள்ள நிலையில் “திமுக ஆட்சிக்கு வந்தால் பழைய ஓய்வூதியத் திட்டம் நிச்சயம் நிறைவேற்றப்படும்'' என்ற வாக்குறுதி பொய்த்துப் போயுள்ளது மன்னிக்க முடியாத நம்பிக்கைத்துரோகம் ஆகும்.

தமிழகத்தைப் பொறுத்தவரை பழைய ஓய்வூதியத் திட்டமும் இல்லாமல் புதிய ஓய்வூதியத் திட்டமும் இல்லாமல் 2003க்கு பின்னர் பணியில் சேர்ந்தவர்கள் பணியிலிருந்து ஓய்வுபெற்றதும் செட்டில்மெண்ட் வாங்கிக் கொண்டு அடுத்த மாதத்திலிருந்து வாழ்வாதாரத்திற்கு வழியில்லாமல் பிச்சை எடுக்க வேண்டிய சூழ்நிலைதான் இப்போது நிலவுகிறது. இந்த அபாயகரமான சூழ்நிலையிலிருந்து வெளிவர வேண்டும் என்றால் அதற்கான போராட்டங்களை உக்கிரமாக முன்னெடுக்க வேண்டியது அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் ஆகிய நம் அனைவரின் தலையாய பொறுப்பும், தவறாத கடமையுயாகும். இந்த காரணத்தினால்தான் நாம் ஓய்வூதியம் என்ற வாழ்வாதார

உரிமைகைகாக மட்டுமல்லாமல் கவனிக்கப்படாமல் உள்ள நம்முடைய பல உரிமைகளுக்காகவும் தொடர்ந்து தீப்பந்தம் ஏந்த வேண்டிய நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறோம்.

நம்பிக்கை வாக்குறுதி கொடுத்து ஆட்சிக்கு வந்த ஒரு அரசு கொடுத்த வாக்குறுதிகளில் ஒருசிலவற்றைக்கூட நிறைவேற்றிட மறுக்குமானால் அதற்கான விலையை அது கொடுத்தே தீர வேண்டும் என்பதை அக்டோபர் 7ஆம் தேதி நடைபெறும் நமது சங்கத்தின் மாநில பிரதிநிதித்துவப் பேரவை முடிவு செய்யும். திமுக அரசின் முதல்வர் நமக்கு கொடுத்த நயவஞ்சகப் பரிசை நாம் வருகின்ற 2024 நாடாளுமன்றத் தேர்தலில் திருப்பிக் கொடுக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். இன்னும் காலம் கடந்துவிடவில்லை என்று அரசு உணர்ந்து நம்முடைய கோரிக்கைகளை தீர்க்க முன்வராவிட்டால் இந்த அரசை நாடாளுமன்றத் தேர்தலில் மட்டுமல்ல 2026 சட்டமன்றத் தேர்தலிலும் தீர்த்துக்கட்ட நம்முடைய ஈட்டிகளை மாநில பிரதிநிதித்துவப் பேரவையில் கூர் தீட்ட வேண்டிய அவசியம் இருக்கிறது. மக்கள் நலன் என்றால் என்ன? அரசு ஊழியர்கள் என்றால் யார்? கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற விட்டால் அவர்கள் என்ன செய்வார்கள் என்பதை எல்லாம் முதல்வருக்கு உணர்த்த இப்போதே நாம் போர்குணமிக்க போராட்டங்களை வடிவமைப்போம். மத்திய அரசானாலும் சரி மாநில அரசானாலும் சரி எந்த அரசாங்கமும் உரிமைகளை பறிக்க முயன்றால் அந்த அரசாங்கத்தை எதிர்த்துப் போராடுவதே உண்மையான ஜனநாயகம் ஆகும். அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் அதற்கு விதிவிலக்கானவர்கள் அல்ல என்பதை நம்முடைய போர்க்குணமிக்க போராட்டங்களும், வலிமையான இயக்கங்களும் அரசுக்கு எடுத்துக்காட்டட்டும்.. அந்த உணர்வோடு நமது இயக்கத்தின் மாநில பிரதிநிதித்துவப் பேரவையில் தீர்மானங்களை பட்டை தீட்ட ஒவ்வொரு அரசு ஊழியரும் அணையாத போர்க்கனலுடன் நெஞ்சில் தீப்பந்தம் ஏற்றி செங்கல்பட்டில் நடக்கும் மாநில பிரதிநித்துவப் பேரவையில் அக்டோபர் 7ல் சங்கமிப்போம்; ஓயாத அலைகடலின் ஓசையென போராட்ட சங்கிசைப்போம். ஈட்டிகளை தீட்டி வைப்போம்! நெஞ்சில் தீ மூட்டி வைப்போம்!

**காலங்கள் மாறும்! கரங்கள் ஒன்று சேரும்!**
**மழை காளான்கள் போல் தேர்தல் மாயங்கள் சாகும்!**
**இது போராட்டக்காலம். புரட்சி வெற்றி கொள்ளும்!!**

**நாணல்கள் போல வளைந்த நாட்கள் போதும்!**
**ஓநாய்கள் பின்னே நடந்து என்ன இலாபம்?**
**தேர்தல்கள் போகும். ஏமாற்றம் நெஞ்சில் தேங்கும்.**
**வேறென்ன மார்க்கம்? வினாக்கள் நெஞ்சை தாக்கும்.**
**உடல் நோகாமல் சாகாமல் வாராது மாற்றம் இது**
**போராட்டக்காலம். புரட்சி வெற்றி கொள்ளும் !!**

## சூடா ஒரு கோப்பை சூப்

### சாத்திக் கிடக்கும் கதவுகள்

சாத்திக்கிடக்கும்
சன்னல் கதவுகள்
சிக்கிக்கொள்ளும்
அவ்வப்போது

இப்போது குத்து,
உள்ளங்கையால்
பலம்கொண்ட மட்டும் ;

மணிக்கட்டு நரம்புகள்
விர்ரென்று தெறிக்கும்
குத்து
தெறிக்கும் விடாதே

ஒரு உபகரணம் தேடியேனும்
அதைத் திறந்துவிடு
வானத்தைப் பார்க்க
உனக்குப் பல இடங்களுண்டு
வானம் உன் அறையைப் பார்க்க
வேறு வழி எதுவுமில்லை
சிக்கும் கதவுகளைப் திறந்துவிடு.

– சுந்தர ராமசாமி

# யாவும்... நாம் எழ வீழும்...

தமிழகத்தில் இன்று ஆட்சி பொறுப்பில் இருக்கிற தி.மு.க. அரசு ஆட்சிப் பொறுப்பிற்கு வந்து இரண்டு ஆண்டு முடிந்து மூனறாம் ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கும் இந்த நிலையிலும் இன்னும் இரண்டரை ஆண்டுகளில் சட்டமன்ற தேர்தலையும், 2024ல் நாடாளுமன்ற தேர்தலையும் சந்திக்க உள்ள இத்தகைய சூழலில் நடைபெற உள்ள நம்முடைய மாநில பிரதிநிதித்துவப் பேரவையில் இந்த இரண்டரை ஆண்டு காலத்தில் தமிழகத்தில் நாம் சந்தித்து வந்துள்ள பிரச்சனைகள் குறித்து விரிவான ஆய்வினை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதன் அடிப்படையில் தமிழக அரசு ஊழியர்களின் கோரிக்கைகள் ஒன்றைக்கூட நிறைவேற்றப்படாமலும், தொடர்ந்து ஊழியர் விரோத அரசு ஆணைகளை பிறப்பித்துக் கொண்டுள்ள இந்த நடவடிக்கைகளுக்கு எதிராக வலுவான வியூகம் அமைக்க வேண்டியுள்ளது.

இன்று தமிழக அரசின் பல்வேறு பணிகளில் மிக வேகமாக தனியார் மயமாக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெறும் மக்கள், காப்பீட்டு திட்டத்தில்தான் சிகிச்சை பெறக்கூடிய நிலை உள்ளது. தர்ம ஆஸ்பத்திரி என்ற நிலை மாறி இன்று இன்சூரன்ஸ் திட்டத்தில் சிகிச்சை என்ற நிலை அரசு மருத்துவமனை இருக்கிறது. மேலும் மருத்துவத்துறை, மாநகராட்சி, பேரூராட்சி, நகராட்சிகளில் ‘சி’ மற்றும் ‘டி’ பிரிவு பணியிடங்கள் அவுட்சோர்சிங்க, ஒப்பந்த முறை, புற ஆதரா முறையில் மேற்கொள்ளப்பட தனியார்வசம் ஒப்படைக்கப்பட்டு வருகின்றன.

ஏழை எளிய மக்களுக்கு பல்வேறு சான்றிதழ்களை இலவசமாக வழங்கி வரும் வருவாய்த்துறை மற்றும் நில அளவைத்துறை போன்றவற்றில் சான்றிதழ் வழங்கும் பணிகள் இ-சேவை மையத்திடம் ஒப்படைக்கப்பட்டு, அதற்கு கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. கூட்டுறவுத் தணிக்கைத்துறை ஊழியர்கள் செய்து வந்த தணிக்கைப் பணி தனியார் பட்டயக் கணக்காளர்களிடம் ஒப்படைக்கப்பட்டு வருகிறது. அரசின் கேந்திரமான காவல்துறையில் தொகுப்பூதிய நியமனம் நடைபெற்று வருகிறது. இத்துறை வாகனங்களை பராமரித்து வரும் காவல் போக்குவரத்துப் பணிமனை இழுத்து மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

தமிழக அரசின் உள்ளாட்சி நிறுவனங்களான மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சித்துறைகளில் சுகாதாரப் பணிகள், அடி பம்பு பழுது நீக்கும் பணிகள், தெருவிளக்கு பராமரிக்கும் பணிகள் தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டு வருகிறது.

கருவூலத்துறை முற்றாக விப்ரோ நிறுவனத்தில் ஒப்படைக்கப்பட்டு நவீனமயம், கணினிமயம் என்ற பெயரில் ஊழியர்களை கசக்கி பிழியக்கூடிய நிலையில், தனியார்மயத்தை நோக்கி இழுத்து செல்லும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அதேபோல் சமூக நலத்துறை சார்ந்த சத்துணவுத் திட்டத்தில் காலை சிற்றுண்டி திட்டம் தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் அங்கன்வாடி திட்டத்தில் குறு அங்கன்வாடி மையங்கள் உருவாக்கப்பட்டு ஊதியக்குறைப்பு செய்யப்படுகிறது. வேலை வாய்ப்புத்துறை மூலம் நடைபெற்ற பணி நியமனங்களுக்கு தமிழக அரசு தடை ஏற்படுத்தியுள்ளது. இனி பணி நியமனத்திற்கு வேலை வாய்ப்பு பதிவு எண் அவசியமில்லை என்ற நிலையும், அத்துறையின் பெயர் மாற்றி வேலைவாய்ப்பு மையம் என (Exchange) வேலைவாய்ப்பு திருவிழா நடத்தி அத்தக்கூலி கொத்தடிமை கூலி முறை அமுல்படுதததி வருகிறது. வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தோர் எண்ணிக்கை 80 லட்சத்தை தாண்டி இளைஞர்களுக்கு அரசு வேலை வாய்ப்பு

என்பது எட்டாக் கனியாக மாறி விட்டது. மாண்புமிகு முதல்வர் சுதந்திர தின உரையில் 55 ஆயிரம் காலிப் பணியிடங்கள் பூர்த்தி செய்யப்படும் என கூறியுள்ளதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

தமிழக அரசு மறு சீரமைப்பு என்ற பெயரால் வணிகவரித்துறை போன்ற அரசுக்கு வருவாய் ஈட்டித்தரும் பல்வேறு துறைகளை சீரழித்து வருகிறது. புள்ளியல்துறை, வேளாண்மைத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் பல பணிகள் தனியாருக்கு ஒப்படைக்கப்பட்டு வருகின்றன. ஊரக வளர்ச்சித்துறையில் திணிக்கப்பட்டுள்ள ஏராளமான மக்கள் நலத் திட்டங்களால் அத்துறை ஊழியர்கள் சொல்லொணாத் துயருக்கு ஆளாகியுள்ளனர். நீதித்துறையில் ஊழியர்கள் ஓய்வின்றி இரவு பகலாகப் பணியாற்றும் அவல நிலை உள்ளது. குறிப்பாக கடுமையான மன உளைச்சலுக்கும், நோய்க்கும் ஆட்ப்பட்டுள்ளார்கள்.

கல்வித்துறை முற்றிலும் புதிய திட்டங்களினால் ஊழியர்கள் கடுமையான சிரமத்திற்கு ஆளாகி உள்ளார்கள். அரசு தொழில் பயிற்சி நிலையங்களில் (Public Private Partnership) முறை அமுல்படுத்தப்பட்டு மாணவர்கள் நீண்ட காலத்திற்கு தொழில் நுட்ப பயிற்சி என்ற பெயரில் தனியார் தொழிற்சாலைகளில் கொத்தடிமைகளாக பணியாற்ற வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். தமிழகத்தில் 6 லட்சம் பணியிடம் காலியாக உள்ள நிலையில் அனைத்துத்துறை ஊழியர்களும் கடும் பணி சுமைக்கும், மன அழுத்தத்திற்கும் ஆளாக்கப்பட்டுள்ளனர். முறையற்ற, முழுமையற்ற மின் ஆளுகைப் பணிகளால் அனைத்து பணிகளுமே இரட்டிப்பாக்கி ஊதியம் பெறுவதில் கூட இன்னும் பல்வேறு பிரச்சனைகள் இருந்து வருகின்றன.

அரசு ஊழியர்களுக்கு குற்றக் குறிப்பாணைகள் வழங்கப்பட்டால் அவ்ற்றை உரிய காலத்தில் முடிக்கப்பட வேண்டும். ஓய்வு பெறும் நாளில் தற்காலிக பணி நீக்கம் கூடாது என அரசு ஆணைகள் வெளியிடப்பட்டிருந்தும் கூட பல அரசு ஊழியர்கள் ஓய்வு பெறும் நாளில் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டு வருகிறார்கள். அதுபோல் குற்றக் குறிப்பாணைகள் நிலுவையில் உள்ளதால் பதவி உயர்வுகளும் மறுக்கப்பட்டு வருகிறது.

மத்திய அரசு தன் ஊழியர்களுக்கு கொண்டு வருவதற்கு முன்பே தமிழக அரசு ஊழியர்களுக்கு 1.4.2003 முதல் புதிய ஓய்வூதியத் திட்டத்தை கொண்டு வந்தது கடந்த அதிமுக ஆட்சியாளர்கள்தான் என்பதும் அரசு ஊழியர்களுக்கு தெரியும்.

அரசு இயந்திரத்தின் தலைமைப் பீடத்தில் இருக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களே, தங்களுக்கு அரசு இயந்திரத்தின் அச்சாணியாய் இருக்கும் அரசு ஊழியர், ஆசிரியர்கள் தான் என்பது தங்களுக்கு தெரியும் ஏன் என்றால் கடந்த இரண்டரை ஆண்டுகள் ஓடி விட்டன....! இரண்டரை ஆண்டுகளுக்கு முன்னாள் 2021ல் நடந்த சட்டமன்றத் தேர்தலின் போது பிரச்சார மேடைகளில் ஒலித்த உங்கள் குரல்களில் தெறித்த வார்த்தைகள்.... வாக்கியங்கள்..... அர்த்தம் பொதிந்ததாய்..... ஆண்டுகள் பலவாய் அல்லல்பட்டு வரும் அரசு ஊழியர்களுக்கு அருமருந்தாய் தோன்றியது. விடியல் நிச்சயம் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியது. நம்பிக்கை தரும் அந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வலியுறுத்தி இந்த இரண்டரை ஆண்டுகளில் சங்கங்களின் தலைவர்கள் தங்களை நேரில் சந்தித்து பேசி, முறையிடுகள் அளித்து வந்ததெல்லாம் பயனற்று போனதால் பல லட்சம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் 2023 ஏப்ரலில் உங்களை நேரில் சந்தித்து முறையிடவே திரண்டோம். ஆனால் தங்கள் உத்திரவின் பேரில் எங்களின் கோரிக்கைகளை பேசி தீர்ப்பதற்கு மூன்று அமைச்சர்களை நியமித்து பேச்சு வார்த்தை கடந்த 8.4.2023 அன்று நடைபெற்று அதில் பழைய ஓய்வூதயம், சிறப்பு காலமுறை ஊதியம், தொகுப்பூதியம், மதிப்பூதியம், முடக்கப்பட்ட சரண்டர், ஊதிய முரண்பாடுகள், காலிப் பணியிடம் நிரப்புதல் உள்ளிடட் கோரிக்கைகள் முதல்வரின் கவனத்திற்கு கொண்டு சென்று நல்ல செய்தி விரைவில் மாண்புமிகு முதல்வர் சட்டமன்றத்தில் அறிவிப்பார் என்று பேச்சுவார்த்தையில் பங்கேற்ற மூன்று

அமைச்சர் பெருமக்கள் தெரிவித்தார்கள். நிச்சயமாக தேர்தல் கால வாக்குறுதி நிறைவேற்றப்படும் என.......! நாங்கள் மிகுந்த நம்பிக்கையோடும் எதிர்பார்ப்போடும் இந்த நான்கு மாதகாலமாய் காத்திருந்தோம்.... ஆனால்....?

இம்மண்ணில் 75 ஆண்டுகளுக்கு முன் ஏற்கப்பட்ட இந்த அரசியல் சாசன விதியின்படியான தங்கள் தேர்தல் கால வாக்குறுதி கடந்த இரண்டரை ஆண்டுகளாக கண்டு கொள்ளப்படவேயில்லையே ஏன்? என்பது தான் எங்கள் முறையீட்டின் முதன்மை அம்சமாகும். அரசு என்பது முன்மாதிரியான முதலாளியாகத் திகழ வேண்டும் என்றும், தன் ஊழியர்களுக்கு நியாயமான ஊதியத்தை வழங்க இயலாத நிறுவனங்கள் இயங்கத் தகுதியற்றது என்றும் நீதி மன்றங்கள் சுட்டிக் காட்டியுள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இதன் காரணமாக தமிழக அரசு தவறான நடவடிக்கைகளால் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் ஏராளமான பிரச்சனைகளை சந்தித்து வருகின்றனர். ஊழியர்களின் பணி நிலையில் மட்டும் தான் பிரச்சனை என்றில்லை. ஊதியத்திலும் ஏராளமான பிரச்சனைகள். மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் என்பது அவர்கள் பெற்று வரும் படிகளை உள்ளடக்கியதே மத்திய அரசு ஊழியர்கள் பெற்று வரும் படிகள் எதையும் மாநில அரசு ஊழியர்களுக்கு வழங்க மறுத்து வருகிறது தமிழக அரசு. அத்தோடு தொழில் நுட்ப ஊழியர் உள்ளிட்ட பல்வேறு பிரிவினரின் ஊதிய முரண்பாடுகள் சரி செய்யப்படாமல் பல ஆண்டுகளாக நீடித்து வருகிறது. சாலை பணியாளர்களுக்கு 41 மாதம் பணிக்காலமாக மாற்றப்படாமல் உள்ளது. இன்றைய முதல்வரின் வாக்குறுதிப்படி தொகுப்பூதிய முறை ரத்து செய்யப்பட்டு காலமுறை ஊதியம் நாளது வரை வழங்கப்படாமலேயே உள்ளது.

தோழர்களே! நாம் பிரச்சனைகளை இவ்வாறு பட்டியல் இட்டுக்கொண்டே போகலாம். பக்கங்கள் போதாது. இங்கே சுட்டிக்காட்டப்பட்டுள்ள பிரச்சனைகளுக்காக பல போராட்டங்களை நடத்தியிருக்கிறோம். அதன் மூலம் சிலவற்றிற்கு தீர்வு கண்டுள்ளோம். பலவற்றைத் தடுத்துள்ளோம். ஆனாலும் அடிப்படையான பல கோரிக்கைகளுக்கு தீர்வு காணப்படாமலேயே உள்ளது.

இதற்குத் தீர்வு என்ன? போராட்டங்களே.... அரசின் ஊழியர் விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக களத்தில் நாம் நடத்தும் போராட்டங்களே பிரச்சனைகளுக்கு தீர்வை கொண்டு வந்து சேர்க்கும். அத்தகைய வலுவான களப் போராட்டங்களை தீர்மானிக்கக் கூடிடுவோம். 2023 அக்டோபர்-7, செங்கல்பட்டில்....

நாம் எழ... அனைத்தும் வீழும்.... என்பது கடந்த கால வரலாறு. அத்தகைய வரலாறு படைக்க வீறு கொண்டெழுவோம் ! ●

## “ பஞ்ச் ”

மொரப்பா



**“விலை ஏறும்போது என்ன சொன்ன?”**

**“எண்ணெய் நிறுவனம் தான் விலை ஏத்துதுன்னு.”**

**“இறங்கும்போது என்ன சொல்ற?”**

**“எங்க ஜீ தான் விலை இறக்குறார்ன்னு.”**

**“இதுல எதுடா உண்மை?”**

# தனிமனித ஒழுக்க நியதிகள் பொது வாழ்க்கைக்கு பொருந்துவதில்லை!

**- ஜிஜி**

**ஓட்டுபோட்ட மக்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் தருவது கடனும் வரிச்சுமையும்தான்**

நீங்களோ நானோ ஒரு பைனான்ஸ் கம்பெனியிலோ, வங்கியிலோ, கந்துவட்டிக் காரனிடமோ கடன் வாங்கி விட்டால் அதை திருப்பிக் கொடுக்கும் வரை எவ்வளவு மன உளைச்சலில் இருப்போம். அய்போ மாதாமாதம் தவறாமல் கடன்தவணையை செலுத்திவிட வேண்டுமே என்ற எண்ணத்தைத் தவிர வேறு எதுவும் நம்மிடம் இருக்காது. இந்தமாதம் பணம் செலுத்த முடியாமல் போய்விட்டால் என்ன ஆகும்? கடன்காரன் வீட்டு வாசலில் நின்று நம்முடைய மானத்தை எடுப்பானோ? அல்லது கைபேசியில் அழைத்து கழுவிக் கழுவி ஊற்றுவானே என்கிற கவலையும் பயமும்தான் இருக்கும். ஆனால் நம்முடைய ஆட்சியாளர்களோ அரசியல்வாதிகளோ நாட்டின் கடனைப்பற்றி கிஞ்சித்தும் கவலைப்படுவததில்லை.

இந்திய மாநிலங்களிலேயே கடன்வகையில் ஏழரை லட்சம்கோடி ரூபாய் கடன்பட்டு முதன்மை மாநிலமாக பெருமை பெருகிறது தமிழ்நாடு. முந்தைய ஆட்சியாளர்கள் ஐந்து லட்சம்கோடி கடன் வைத்தார்கள். இவர்கள் இரண்டரை வடங்களுக்குலூளேயே மொத்த கடன்தொகையை ஏழரை லட்சம் ஆக்கிவிட்டார்கள். தமிழ்நாட்டின் மக்கள் தொகை ஏழரை லட்சம் என்று எடுத்துக் கொண்டால் ஆளுக்கு ஒரு லட்சம் ரூபாய கடன் இருக்கிறது.

தன்மானம் உள்ள தனிமனிதனோ சில ஆயிரம் ரூபாய் கடனை அடைக்க முடியாவிட்டால் அதற்காக வருந்தி தூக்கில் தொங்குகிறான். விஷம் அருந்துகிறான் அல்லது ரயில் வண்டி முன் பாய்கிறான். ஆனால் ஆட்சியாளர்கள் அதைப்பற்றி கவலைப்படுவதில்லை. ஆனால் ஆட்சியாளர்களாக இருக்கக்கூடிய அரசியல்வாதிகள், ''இதற்கு முன்பும்தான் கடன் இருந்தது'' என்று வெட்கமில்லாமல் சொல்கிறார்கள். இந்திய சமுதாயத்திற்கும், இந்திய அரசியலுக்கும் இடையில் உள்ள வித்தியாசம் இதுதான். அய்யோ மக்களை கடனாளிகள் ஆக்கிவிட்டோமே என்று அவர்கள் சற்றும் கவலைப்படுவதில்லை. வாங்கிய கடனுக்கு வட்டி கட்டுவதில் அவர்களுக்கு கூச்சநாச்சமில்லை. தனிமனித ஒழுக்க விதிகள் பொது வாழ்க்கைக்கு பொருந்துவதில்லை.

வரவுக்குள் செலவு என்ற நியதியை அரசாங்கங்கள் கடைபிடிப்பதில்லை. இலவசங்களை அள்ளி வீசுவதினாலோ நலத்திட்டங்களை செயல்படுத்துவதினாலோ அரசு வருமானத்தில் அரசு ஊழியர்களுக்கு ஊதியம் கொடுப்பதினாலோ அரசாங்கத்தின் கடன் சுமை ஏறுகிறது என்பதெல்லாம் கட்டுக்கதை. ஒரு லட்சம் கோடி ரூபாய் வரியாக வருவதற்கு முன்னதாகவே வரி செலுத்துபவரிடம் பேரம் பேசி ஒரு லட்சம்



ரூபாய் வரி கட்ட வேண்டியவரிடம் எனக்கு ரூ.25000 கொடுத்துவிடு நான் உன் வரியைப் பாதியாகக் குறைத்துவிடுகிறேன் என்று அரசாங்கத்திற்கு வரவேண்டிய வரியை மடை மாற்றி தரகர்மூலம் தங்கள் சொந்த கஜானாக்களை நிரப்பிக் கொள்கிறார்கள் அரசியல்வாதிகள். இதன்காரணமாக வருகின்ற பாதி பணத்தில் நலத்திட்ட பணிகளுக்கு செலவுசெய்வதென்றால் எப்படி முடியும்? ஒரு லட்சம் கோடி ரூபாய் வருமானத்தில் சுமார் 75000 கோடி ஆட்சியாளர்களுக்கும் கணக்குகளை ஜோடிக்கும் உயரதிகாரிகளுக்கும் ஆட்சியாளர்களின் அடிவருடிகளுக்கும் சென்றுவிடுவதால் 25000 கோடி ரூபாய் போதவில்லை என்று அரசாங்கம் கடன் வாங்குகிறது. இப்படி மக்களின் வரிப்பணத்தில் முக்கால்வாசித் தொகை எங்கெங்கோ யார் யாருக்கோ எப்படியெப்படியெல்லாமோ பதுக்கப்பட்டால் நாட்டின் கடன் ஆண்டுதோறும் உயர்ந்துகொண்டுதான் இருக்கும். அதே சமயம் மக்களுக்கு என்ன கிடைக்கும் கடனும் வரிச்சுமையும்தான்.

**எளிய மக்களுக்குத் தேவை கருணையல்ல...நீதி**

ஆட்சியாளர்கள் என்ற அரசியல் வாதிகளுக்கு அடுத்தபடியாக மக்கள் நலனை சுரண்டுபவர்கள் கார்ப்பரேட்டுகள். ரத்தன் டாடா மூத்த குடிமக்கள் இல்லங்களில் முதலீடு செய்வது பற்றி சுற்றுக்குவரும் காணொளிகள் அவரின் கருணையை காட்டுவதாக ஊடகங்களில் காட்சிக்கு வருகின்றன. எளிய மக்களின் வாழ்க்கை இதுபோன்ற நல்ல முன் முயற்சிகளால் தற்காலிக நிவாரணங்களைப் பெறுகிறது என்பதால் அவை பாராட்டப்படுவது இயல்பே. ஆனால் உண்மையில் எளிய மக்களுக்குத் தேவைப்படுவது கருணையல்ல நீதி.

இந்திய நாட்டின் மிகப் பெறும் கார்ப்பரேட் நிறுவனங்கள் செல்வத்தை பெருமளவு குவித்து வருகின்ற. வருமான மறு பங்கீட்டில் எளிய மக்களுக்கு இழைக்கப்படும் வஞ்சனையே இந்த குவிப்பிற்கான ஆதாரம். பெரும் தொழிலதிபர்கள் வழங்கும் மனிதநேய உதவிகளும், கார்ப்பரேட் சமூக பொறுப்பு திட்டங்களும் அவர்களின் செல்வக் குவிப்பின் மீது போடப்படும் அழகான திரை ஆகும். ஒரு மென்மையான முகத்தை சமூக அமைப்புக்கு தந்து சுரண்டலுக்கான சமூக ஒப்புதலையும் பெற்றுத் தருகிற வழிமுறை இது. இப்படி நடந்தேறும் சமத்துவமற்ற வருமான வரிப் பங்கீட்டில் பயனாளிகள் பெரும் தொழிலதிபர்களே.

இப்படி இவர்கள் கருணை பொழிவதை விட கார்ப்பரேட் வரிகளை உயர்த்துவதற்கு சம்மதித்து அரசின் வருவாய் திரட்டலுக்கு உதவலாம். ஆதன்மூலம் கிடைக்கிற வருவாயை அரசாங்கள் எளிய குழந்தைகளின் கல்விக்கு, சத்துணவுக் குறைபாட்டைத் தீர்க்க, சுகாதாரம் உறுதி செய்யப்பட, மூத்த குடிமக்கள் நலன்காக்க பயன்படுத்த வழி செய்யலாம். தற்போது இந்திய கார்ப்பரேட் வரிகளின் சதவீதம் மொத்த வரிவருவாயில் 15 சதவீதம் சரிந்துள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்பு இது 22 சதவீதமாக இருந்தது. ஆனால் ஜிஎஸ்டி-யின் பங்கு மொத்த வரி வருவாயில் 25 சதவீதமாக உயர்ந்துள்ளது. இது சாமானிய நடுத்தர மற்றும் ஏழை மக்களின் பாக்கெட்டுகளில் இருந்து பெரிதும் பறிக்கப்படுவதாகும்.

ஆக்ஸ்பாம் அறிக்கையின் சில பகுதிகளை எகனாமிக்ஸ் டைம்ஸ் ஏடு ''பெரும் பணக்காரர்களே வாழ்கிறார்கள்'' (Survival of the Richest) என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளது. அதன்படி செய்தால் இந்தியாவின் கடன், கல்வி, வேலைவாய்ப்பின்மை போன்ற பல பிரச்னைகளுக்கு தீர்வு காணலாம் என்று அது கூறுகிறது.

1. இந்தியாவின் முதல் 10 பணக்காரர்கள் மீது 5 சதவீத கூடுதல் வரி போட்டால் அனைத்து குழந்தைகளும் இடைநிற்றல் இன்றி பள்ளிகளுக்கு வருவதை உறுதி செய்யலாம்.

2.ஒரே ஒரு பில்லியனர் அதானி மீது 2017-21 ஐந்தாண்டு காலத்தில் ஈட்டிய லாபங்கள் மீது ஒருமுறை வரி போட்டால் 1.74 லட்சம் கோடி பெறலாம். இது இந்தியாவின் 50 லட்சம் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு ஓராண்டு சம்பளம் தர உதவும்.

3. இந்திய பில்லியனர்களின் செல்வம் மீது 2 சதவீத வரி போட்டால் அது குழந்தைகளின் சத்துணவுக் குறைபாட்டை மூன்று ஆண்டுகளுகக்கு ஈடு செய்ய உதவும்.

4. இந்திய பில்லியனர்களின் மொத்த செல்வத்தின் மீது 5 சதவீத வரியை ஒரே ஒருமுறை போட்டால் ரூ.1.37 லட்சம்கோடி கிடைக்கும். இது குடும்ப நலம் மற்றும் ஆயுஷ் அமைச்சகங்கள் 2022-23ல் பெற்ற பட்ஜெட்தொகையாக ரூ.90000 கோடியை விட் ஒன்றரை மடங்கு அதிகம்.

ஆனால் இதைச் செய்யாத அரசாங்கம் மூத்த குடிமக்களுக்கான ரயில் கட்டண சலுகையை பறிக்கிறது. பயன் வரையறுக்கப்பட்ட ஓய்வூதியத்தை மறுக்கிறது. சமவேலைக்கு சமஊதியம் தர மறுக்கிறது. குறைந்தபட்ச ஊதியத்தை தொழிலாளர்களுக்கு வழங்குவதை உறுதி செய்யாமல் உள்ளது. 10 கோடி மூத்த குடிமக்களை வாழ்வாதாரமின்றி தவிக்க விட்டுள்ளது. ஏழை எளிய மக்களின் ரத்தமும் வியர்வையுமே பெரும் தொழிலதிபர்களின் செல்வம். பில்லியர்களின் எண்ணிக்கை உயர்கிறதென்றால் சாமானிய மக்களின் வாழ்க்கை சரிகிறதென்றே பொருளாளதா உண்மைகள் பகர்கின்றன. இந்தியப் பிரதமர் கொண்டாடுவதைப் போல "செல்வத்தை உருவாக்குபவர்கள் இந்திய தொழிலதிபர்கள்" அல்ல. ஏழை எளிய மக்களே.இம்மக்களுக்குத் தேவை நீதியே தவிர கருணை அல்ல.

**பெரும் செல்வந்தர்களுக்கு தள்ளுசெய்யப்பட்ட வாராக் கடன்கள்**

2022-23 ஒரே ஆண்டில் வணிக வங்கிகள் ரூ.2.09 லட்சம் கோடி மதிப்பிலான பெரும் கார்ப்பரேட் முதலாளிகளின் கடன்களை தள்ளுபடி செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த விவகாரம் சமூக வலைத் தளங்களில் பரபரப்பான செய்திகளாக வலம் வருகின்றன. ஆனால் ஆளும் அரசிற்கு ஆதரவான வலதுசாரிகள், தள்ளுபடி என்பது தள்ளுபடி அல்ல என்றும், தள்ளுபடி செய்யப்பட்ட கடனை வரும் நாட்களில் திரும்பப் பெற முடியும் என்றும் வித்தியாசமாக முட்டு கொடுக்கின்றனர்.

வராக் கடன்கள் என்பது 90 நாட்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கு திருப்பிச் செலுத்தப்படாத கடன்களாகும். மார்ச் 2023 நிலவரப்படி வணிக வங்கிகளின் ஒட்டு மொத்த வராக் கடன் ரூ.5.72 லட்சம் கோடியாக உள்ளது. இது மொத்தக் கடன்களில் 3.9% என்ற மோசமான விகிதத்தில் உள்ளது. ஆனால் மார்ச் 2018 நிலவரப்படி வராக் கடன் ரூ.10.36 லட்சம் கோடி என்ற அளவில் மொத்த கடன் விகிதத்தில் 11.2% என்ற அளவில் இருந்ததாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. மார்ச் 2018 நிலவரப்படி ஒப்பிட்டுப் பார்த்தால் கடந்த 5 ஆண்டுகளில் 7.3% அள வில் மொத்த வராக் கடன்கள் குறைந்துள்ளன என்று கூறப்படுகிறது. இது எப்படி நடந்தது? உண்மையில் நான்கு ஆண்டுகளாக வராக் கடனாக இருந்த கடன்களை, வங்கியின் இருப்புநிலைக் குறிப்பில் இருந்தே தள்ளுபடி செய்வதன் மூலம், எல்லாம் கைவிடப்பட்டு பட்டியலே சுருக்கப்பட்டுள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் வங்கிகள் ரூ.10.57 லட்சம் கோடி வராக் கடன்களை தள்ளுபடி செய்துள்ளன. மேலும் இந்த கால கட்டத்தில் பல புதிய மோசமான கடன்களை (செலுத்த முடியாது என்று கருதும் கடன்) குவித்துள்ளனர். தள்ளுபடி செய்யப்படுவதற்கு முன்பே மோசமான கடன்களையும் திரும்பப் பெற்றுள்ளனர். மேலும் தள்ளுபடி செய்யப்பட்ட அனைத்து வராக் கடன்களும் "தொழில்நுட்ப தள்ளுபடிகள்" என்று வகைப்படுத்தப்பட்டு, பட்டியல் நீக்கம் பெற்றுள்ளன. இத்தகைய 'தொழில்நுட்ப தள்ளுபடிகளை' வங்கியின் தலைமை அலுவலக மட்டத்தில் தள்ளுபடி செய்யப்பட்ட மோசமான கடன்கள் என இந்திய ரிசர்வ் வங்கி வரையறுக்கிறது. தலைமை அலுவலகமே பட்டியல் நீக்கம் செய்துவிட்ட பின், கிளை வங்கிகளின் கணக்கியல் புத்த கங்களில் 'மோசமான கடன்களாக' இவை இருக்குமாம். கிளை மட்டத்தில் மீட்பு முயற்சிகளும் தொடருமாம். இதனால், தள்ளுபடி செய்யப்பட்ட கடனை இன்னும் வசூலிக்க முடியும் என்று, ஒன்றிய அரசாங்கத்தை ஆதரிக்கும் நபர்கள் வித்தியாசமான கருத்துக்களை கூறி திசை திருப்புகிறார்கள்.

மக்களவையில் இதுதொடர்பாக எழுப் பிய கேள்விக்கு ஒன்றிய அரசு சார்பில் அளிக்கப்பட்ட பதிலில், “கடன் தள்ளுபடியானது. கடன் வாங்கியவர்களின் கடனை கணக்கியல் ஏடுகளில் இருந்து தள்ளுபடி செய்து விட்டதாக அர்த்தமல்ல; ஏனெனில் தள்ளுபடி செய்யப்பட்ட கடன்களை கடன் வாங்கியவர்கள் திருப்பிச் செலுத்த வேண்டிய பொறுப்பு உள்ளது” என கூறப்பட்டது. ஆனால் பிரச்சனை என்னவென்றால் இந்த கோட்பாட்டில் அனைத்தும் உண்மையாக இருந்தாலும் நடைமுறையில் எந்த வேலையும் செய்யாது. ஒன்றிய அரசு நாடாளுமன்றத்தில் கூறியதை உற்றுநோக்கினால் கடந்த மூன்று ஆண்டுகளில் தள்ளுபடி செய்யப்பட்ட கடன்களின் மொத்த தொகை ரூ.5.87 லட்சம் கோடியாகும். ஆனால் வங்கிகள் சுமார் ரூ.1.09 லட்சம் கோடியை மட்டுமே திரும்பப் பெற்றுள்ளன. இது தள்ளுபடி செய்யப்பட்ட கடன்களில் ஐந்தில் ஒரு பங்கிற்கும் குறைவாகவே உள்ளது. உண்மையில் 2022 டிசம்பரில் மக்கள வையில் ஒரு கேள்விக்கான பதிலில்,”2017-18 முதல் 2021-22 வரை பொதுத்துறை வங்கிகள் தள்ளுபடி செய்த ரூ.7.35 லட்சம் கோடி மதிப்பிலான கடன்களில், 1.03 லட்சம் கோடி மதிப்புள்ள கடன்கள் மட்டுமே மீட்கப்பட்டது” என்று அரசாங்கம் சுட்டிக்காட்டியது. ஆகஸ்ட் 2018 இல் வெளியிடப்பட்ட நிதி நிலைக்குழுவின் 68-வது அறிக்கையில், “2014-15 முதல் 2017-18 வரையில், பொதுத் துறை வங்கிகள் ரூ. 3.17 லட்சம் கோடி மதிப்பிலான கடன்களைத் தள்ளுபடி செய்து, வெறும் ரூ.44,900 கோடியை வசூலித்ததாக” சுட்டிக் காட்டியுள்ளது. கோட்பாட்டியல்படி தள்ளுபடி செய்யப்பட்ட கடன்களை திரும்பப் பெற முடியும் என்று சொல்வது எளிதானது. ஆனால் நடைமுறையில் தள்ளுபடி செய்யப்பட்ட கடன்களில் பெரும்பாலானவை மீண்டும் தள்ளுபடி செய்யப்படுகின்றன. ஏனெனில் கடன்களை திரும்பப் பெற முடியாது. ஆக கடன்கள், வட்டிகள், மான, அவமானங்கள், தனிமனித ஒழுக்கங்கள் எல்லாம் ஏழை எளிய நடுத்தர மக்களுக்கானவை அவை ஆட்சியாளர்களுக்கோ, அரசியல்வாதிகளுக்கோ, பெருஞ் செல்வந்தர்களுக்கோ, கார்ப்பரேட் முதலாளிகளுக்கோ பொருந்துவதில்லை. சாமானிய மக்களைச் சுரண்டிக் கொழுப்பதற்கும், சலுகைகளை அனுபவிப்பதற்கும் மட்டுமே பிறந்தவர்கள் மேற்படியோர்கள். நெற்றிப்பொட்டில் சுட்டியபடி சொல்வதானால் தனிமனித ஒழுக்க நியதிகள் பொது வாழ்க்கைக்கு பொருந்துவதில்லை.



“நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஆளும்கட்சி அமைச்சர்கள் நிலவின் தென்துருவத்தில் பதுக்கி வைத்திருக்கும் ஊழல் பணத்தை எடுத்து வந்து உங்கள் அனைவரின் வங்கிக்கணக்கில் தலா 20 லட்சம் ரூபாய் டெபாசிட் செய்வது மட்டுமல்ல, அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு நீங்கள் யாரும் வேலைக்கு செல்லத் தேவை இல்லாத அளவுக்கு மூணு வேளையும் தரமான சாப்பாடு போடுவோம் என்று சத்தியம் செய்கிறேன்.”

**இந்தமாத ‘டச்சிங்’ கவிதை:**

**எல்லாவற்றிற்கும்**
**ஒரு அளவீடு வைத்திருக்கிறீர்கள்**
**ஒரு அச்சு வைத்திருக்கிறீர்கள்**
**இது தான்**
**இவர் தான்**
**இவரைத்தான்**
**இப்படித்தானென்று.**
**வானவில்லிற்குக்கூட**
**அதே ஏழு வண்ணம்தான்**
**அனுமதிக்கிறீர்கள்.**
**திருத்தித் தொலையுங்கள்**
**சலிப்பாய் இருக்கிறது!**

●

கட்டுரை

# வேலையின்மை என்னும் அபாயம்

**– இரா.மங்களபாண்டியன்**

இந்தியா சந்திக்கும் கடும் பிரச்சனைகளில் ஒன்று விசுவரூபம் எடுத்துவரும் வேலையின்மை ஆகும். கோடிக்கனக்கான இளம் ஆண்களும் பெண்களும் படித்துவிட்டு வேலை பெற முடியாமல் தவிக்கின்றனர். இந்த சூழலில் நெருக்கடி காரணமாக தொழிலாளர்களை பலநிறுவனங்கள் ஆட்குறைப்பு செய்து வருகின்றன. கடந்த சில ஆண்டுகளாக வீழ்ச்சியை சந்திக்கும் முறைசாரா தொழில்களும் விவசாயமும் ஏற்கனவே கடும் வேலையின்மையை தோற்றுவித்துள்ளன. தற்போதைய நெருக்கடியும் இணைந்து வேலையின்மை பூதாகரமாக உருவெடுத்து உள்ளது.

**கடந்த சில தினங்களாக ஊடகங்களில் வெளிவந்த செய்திகள்:**

பிஸ்கட் தயாரிக்கும் பார்லே நிறுவனம் 10000 ஊழியர்கள் ஆட்குறைப்பு.

மாருதி நிறுவனம் 3000 நிரந்தரமற்ற தொழிலாளர்களை வீட்டுக்கு அனுப்பியது.

நிசான் கார் உற்பத்தி நிறுவனம் 1700 ஊழியர்களை நீக்கியது.

இருசக்கர வாகனங்கள் உட்பட மோட்டார் வாகன துறையில் 2,30,000 பேர் வேலை இழப்பு.

இரயில்வே 3,00,000 ஊழியர்களை குறைக்க திட்டம்.

வட இந்திய பஞ்சாலை உற்பத்தியாளர் சங்கம் பொருளாதார நெருக்கடி தொடர்ந்ததால் தமது துறையில் மட்டும் 3 கோடி பேர் வேலை இழக்கும் ஆபத்து உருவாகும் என அபாயச்சங்கு.

காக்னிசண்ட், சிஸ்கோ போன்ற மென்பொருள் நிறுவனங்களும் ஊழியர் எண்ணிக்கை குறைக்க திட்டம்.

ஸ்டார்ட் அப் திட்டத்தில் தொடங்கப்பட்ட ஒயோ ஓட்டல்/ ரிவினோ / ஷாப் க்ளூ போன்ற நிறுவனங்களிலும் ஆட்குறைப்பு.

திருப்பூர் பின்னலாடை நிறுவனங்களும் கோவை இஞ்சினியரிங் நிறுவனங்களும் கடும் பாதிப்பு. ஏராளமான ஊழியர்கள் மற்றும் சிறு உற்பத்தியாளர்கள் வேலை இழப்பு.

இப்படி இந்தப் பட்டியல் முடிவில்லாமல் நீள்கிறது.

நாம் ஒரு முக்கிய அம்சத்தை நினைவில் கொள்வது மிக அவசியம். அது என்னவெனில் ஏற்கனவே பணமதிப்பு நீக்கம் மற்றும் ஜி.எஸ்.டி காரணமாக உருவான, ஆனால் பெரிதும் ஊடகங்களில் பேசப்படாத முறைசாரா மற்றும் சிறு தொழில் வேலையின்மை பெரிய எண்ணிக்கையில் உள்ளது. இப்பொழுது கூடுதலாக உருவாகியுள்ள வேலையின்மை கொடுமை இது ஆகும்.

சிஎம்ஐஇ (CMIE) எனும் ஆய்வு நிறுவனம் 2018ம் ஆண்டு கடைசி காலாண்டில் மட்டும் 1.1 கோடி பேர் வேலை இழந்துள்ளனர் என கூறுகிறது. இதில் 91 லட்சம் பேர் கிராமப்புற உழைப்பாளிகள். இவர்களில் 77 லட்சம் பேர் பெண்கள். மேலும் மொத்த உழைப்பாளிகளில் சுமார் 74% பேர் வேலையின்மை எனும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளனர் எனவும் ஆய்வு அறிக்கை கூறுகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் உருவான வேலையின்மையின் கொடுமையை கீழ்கண்ட விவரங்கள் தெளிவாக்குகின்றன

| ஆண்டு | 2017 | 2018 | 2019 |
|---|---|---|---|
| வேலை இல்லாதவர்கள் | 2.4 கோடி | 3.4 கோடி | 4.5 கோடி |
| 20-29 வயதினர் | 1.78 கோடி | 2.2 கோடி | 3.07 கோடி |
| பெண்கள் | 16.7% | 21.8% | 27.1% |

கடந்த இரண்டு ஆண்டுகளில் 2 கோடி பேர் வேலை இழந்துள்ளனர் வேலை இல்லாத 4.5 போடி பேரில் சுமார் 1.1 கோடி பேர் பட்டதாரிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

விவசாயத்துறை (மற்றும் அதனுடன் தொடர்புடைய பணிகள்) அளிக்கும் வேலை வாய்ப்புகள் 2005ம் ஆண்டில் 25.88 கோடியாக இருந்தது. ஆனால் 2018ம் ஆண்டில் இது 19.73 கோடியாக குறைந்துவிட்டது. இருப்பினும் தேசத்தில் உள்ள வேலைவாய்ப்புகளில் 42% விவசாயத் துறையில்தான் உள்ளது.

இந்தியா முழுவதும் குறிப்பாக பெரு நகரங்களில் கட்டப்பட்ட 12 இலட்சம் வீடுகள் விற்பனை ஆகாமல் தேங்கியுள்ளன. கட்டுமானத்துறை 2005ம் ஆண்டு 1.89 கோடி வேலைவாய்ப்புகளை அளித்தது. ஆனால் 2018ம் ஆண்டு இது வெறும் 16 லட்சமாக சரிந்துவிட்டது. இதில் மிக அதிகம் பாதிக்கப்பட்டது வடமாநில தொழிலாளர்கள்தான். எனவேதான் அவர்கள் தமிழகம், கேரளம் ஆகிய மாநிலங்களுக்கு படையெடுக்கின்றனர்.

ஆலை உற்பத்தி துறையில் 2012-2018 ஆண்டுகளுக்கிடையே சுமார் 10 லட்சம் வேலைவாய்ப்புகள் குறைந்துள்ளன.

கடந்த 6 ஆண்டுகளாக வேலைவாய்ப்பு சந்தையில் நுழையும் உழைப்பாளிகளின் எண்ணிக்கை ஆண்டுக்கு 1.75 கோடி பேர். ஆனால் வேலை பெறுபவர்களோ வெறும் 45 லட்சம் பேர். அதாவது வேலை வாய்ப்பு சந்தைகளில் நுழையும் 4 பேரில் ஒருவர்தான் வேலை பெறுகிறார். மீதி 3 பேர் அதாவது 75% பேர் வேலைவாய்ப்பை பெற முடியவில்லை.

இந்த கடுமையான சூழலை எப்படி எதிர்கொள்வது என்பதே ஒன்றிய அரசாங்கத்திற்கு தெரியவில்லை. அதற்கான திட்டமும் இந்த அரசாங்கத்திடம் இல்லை. இன்னும் தெளிவாக சொல்ல வேண்டுமெனில் இத்தகைய நெருக்கடி உள்ளது என்பதையே இந்த அரசாங்கம் அங்கீகரித்ததாக தெரியவில்லை. வேலையின்மை மட்டுமல்ல: ஒட்டு மொத்த பொருளாதார நெருக்கடியிலும் ஒன்றிய அரசாங்கம் இதே போலவே செயலற்று உள்ளது.

கடந்த காலத்தில் அறிவித்த மேக் இன் இண்டியா ஃ ஸ்கில் இண்டியா ஃ ஸ்டார்ட் அப் இண்டியா ஃசிறுதொழிலுக்கான முத்ரா திட்டம் போன்ற எந்த திட்டமும் வெற்றி பெற இயலவில்லை. ஏன் என கேள்வி எழுப்பி அதனை பரிசீலனை செய்ய ஒன்றிய அரசாங்கம் தயாராக இல்லை. நெருக்கடியின் மையமான அம்சம் மக்களிடம் வாங்கும் சக்தி வீழ்ச்சி அடைந்திருப்பதுதான். ஆனால் இதனை ஒன்றிய அரசாங்கம் உணரமறுக்கிறது. மாறாக பிரச்சனை மறுபுறத்தில் உற்பத்தி செய்யும் துறையில் இருப்பதாக மதிப்பீடு செய்து அதற்கான நிவாரணங்களை அறிவித்து வருகிறது. கார்ப்பரேட்டுகளுக்கு வரி சலுகைகள், கடனுக்கான வட்டி குறைப்பு, வாராக்கடன் தள்ளுபடி என பல சலுகைகள் அளிக்கப்படுகின்றன.

மக்களிடம் பணம் இல்லை எனில் அவர்கள் எப்படி பொருட்களை வாங்குவர்? மக்கள் வாங்கவில்லை எனில் பொருட்கள் எப்படி விற்பனை ஆகும்? உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் விற்பனை ஆகவில்லை எனில் எந்த முதலீட்டாளர் மீண்டும் அதனை உற்பத்தி செய்வார்? உற்பத்திக்கான தேவை இல்லை எனில் எந்த முதலீட்டாளர் வங்கியில் கடன் வாங்குவார்? முதலீட்டாளருக்கு கடன் வாங்க முகாந்திரம் இல்லை எனில் வங்கிகள் கடன் வட்டியை குறைத்து என்ன பயன்? இந்த சாதாரண கேள்விகளை கூட எழுப்பி விடை காண அரசாங்கம் தயாராக இல்லை. கார்ப்பரேட் நலனை குறியாக கொண்டுள்ள எந்த அரசாங்கமும் இத்தகைய கேள்விகளை எழுப்ப முன்வராது.

உழைப்பாளிகளின் கைகளில் பணத்தை புழங்க வைப்பது இன்றைய முக்கிய தேவை ஆகும். இதற்கு சிறந்த வழி வேலை வாய்ப்புகளை உருவாக்குவதுதான். தனியார் துறையினர் தமது மூலதனத்திற்கு சரியான இலாபம் இல்லாததால் முதலீடு செய்ய மறுக்கின்றனர். இத்தகைய சூழல்களில் அரசாங்கமே முதலீடு போடவும் செலவழிக்கவும் முன்வர வேண்டும்.

முதலில் கிராமப்புறங்களில் மகாத்மா காந்தி வேலை வாய்ப்புக்கு வழங்கும் முதலீட்டை பல மடங்கு உயர்த்த வேண்டும். இன்றைக்கு ஒன்றிய அரசாங்கம் மொத்த உற்பத்தி (ஜி.டி.பி) யில் 0.2% மட்டுமே இதற்கு ஒதுக்கீடு செய்கிறது. 2010ம் ஆண்டு இது 0.6 ஆக இருந்தது. குறைந்த பட்சம் அந்த அளவிற்காவது உயர்த்த வேண்டும். இது கணிசமான கிராமப்புற உழைப்பாளிகளின் கைகளில் பணத்தை சேர்க்கும்.

கிராமப்புறத்தை போல நகர்ப்புறத்திலும் வேலைவாய்ப்பு திட்டத்தை உருவாக்க வேண்டும். இந்த கோரிக்கையை இடதுசாரிகள் தொடர்ந்து முன்வைத்து வருகின்றனர். சட்டம் மற்றும் கொள்கை ஆய்வு மையத்தை சார்ந்த மாத்யூ ஐடிகுலா போன்றவர்கள் இப்பிரச்சனை குறித்து பல ஆலோசனைகளை முன்வைத்துள்ளனர். இந்தியாவில் 5000க்கும் அதிகமான நகரங்கள் உள்ளன. இந்த நகரங்களை பல்வேறு உள்ளாட்சி அமைப்புகள் அல்லது அரசாங்கங்கள் நேரடியாக நிர்வகித்து வருகின்றன.

நகரங்களில் பல பணிகளை செய்ய இயலும். உதாரணத்திற்கு சாலை பராமரிப்பு நடைபாதைகளை பராமரிப்பது, அரசாங்கத்தின் பல்வேறு கட்டிடங்கள் பராமரிப்பு, பசுமை இடங்களை பாதுகாத்தல், நீர்நிலைகளை மீட்டு பராமரித்தல், நகரங்களுக்குள் அல்லது அருகில் உள்ள சிறு வனங்கள் அல்லது மரங்கள் உட்பட பயிரினங்களை பாதுகாத்தல் போன்ற பல பணிகளை இத்திட்டம் மூலம் செய்ய இயலும். ஒரு நாளைக்கு ஒரு உழைப்பாளிக்கு ரூ 500 வீதம் 100 நாட்களுக்கு ஊதியம் அளித்தால் கூட நகர்ப்புற மக்களின் கையில் பணத்தை தர முடியும்.

மேலும் வேலை வாய்ப்புகளை அதிகமாக உருவாக்க வாய்ப்புள்ள கல்வி/மருத்துவம்/ உள்கட்டமைப்பு ஆகிய துறைகளுக்கும் அதிகமாக ஒதுக்கீடு செய்ய வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் உழைப்பாளிகள் தாம் ஈட்டிய பணத்தை செலவு செய்ய முன்வருவர். அது பொருட்களின் கிராக்கியை அதிகரிக்கும். உற்பத்தி அதிகரிக்கும், அதிகரிக்கும் உற்பத்தி அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்கும். அது மீண்டும் பணப்புழக்கத்தை அதிகரிக்கும்-இப்படி சங்கிலி தொடர் பலனை இது உருவாக்கும்.

உழைப்பாளிகள் மீது அக்கறை உள்ள எந்த ஒரு அரசாங்கமும் இந்த வழியைத்தான் தேர்ந்தெடுக்கும். ஆனால் ஒன்றிய அரசாங்கம் இதனை செய்யுமா என்பதே மிகப்பெரிய கேள்வி குறி. இதனை செய்ய மறுத்தால் இந்த அரசாங்கத்தை செய்ய வைக்க வேண்டிய கடமை மக்கள் இயக்கங்களுக்கு உள்ளது. ●



# தூர்

“வேப்பம் பூ மிதக்கும்
எங்கள் வீட்டு கிணற்றில்
தூர் வாரும் உற்சவம்
வருடத்துக்கு ஒரு முறை
விஷேசமாக நடக்கும்.

ஆழ் நீருக்குள்
அப்பா முங்க முங்க
அதிசயங்கள் மேலே வரும்…
கொட்டாங்குச்சி, கோலி, கரண்டி,
துருப்பிடித்தக் கட்டையோடு
உள் விழுந்த ராட்டினம்,
வேலைக்காரி திருடியதாய்
சந்தேகப்பட்ட வெள்ளி டம்ளர்…
எடுப்போம் நிறையவே!

‘சேறுடா சேறுடா’ வென
அம்மா அதட்டுவாள்
என்றாலும்
சந்தோஷம் கலைக்க
யாருக்கு மனம் வரும்?
படை வென்ற வீரனாய்
தலைநீர் சொட்டச் சொட்ட
அப்பா மேலே வருவார்.

இன்று வரை அம்மா
கதவுக்குப் பின்னிருந்துதான்
அப்பாவோடு பேசுகிறாள்.
கடைசி வரை அப்பாவும்
மறந்தேப் போனார்
மனசுக்குள் தூர் எடுக்க..!”

– நா. முத்துக்குமார்.

# இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அலுவலர் சங்கத்தின் மாநிலந் தழுவிய பெருந்திரள் முறையீடு இயக்கம்!

**– தெ.வாசுகி**

தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறையில் அமைச்சுப் பணியாளர்களுக்கு பதவி உயர்வு பணிமாறுதல்கள் உரிய காலத்தில் வழங்கவேண்டும், காலிப்பணியிடங்களை போர்க்கால அடிப்படையில் நிரப்பிட வேண்டும், வெளிமுகமை மூலம் பணியமர்த்துவதை முற்றிலுமாக நிறுத்த வேண்டும் உள்ளிட்ட 15 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை ஆணையரிடம் மாநிலந் தழுவிய பெருந்திரள் முறையீடு இயக்கம் 05.09.2023 அன்று காலை 11.00 மணியளவில் நுங்கம்பாக்கம் ஆணையர் அலுவலக வளாகத்தில் நடைபெற்றது. அனைத்து மாவட்டங்களிலிருந்தும் 250 க்கும் மேற்பட்ட ஊழியர்கள் பங்கேற்றார்கள். தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அலுவலர் சங்கத்தின் மாநிலத் தலைவர் தோழர் தெ.வாசுகி தலைமை தாங்கி பெருந்திரள் முறையீட்டினை துவக்கிவைத்தார். மாநிலப் பொதுச் செயலாளர் தோழர் சி.சு.பால்ராஜ் கோரிக்கை விளக்கவுரையாற்றினார். அறநிலையத்துறை ஆணையர் மாநில நிர்வாகிகளை அழைத்துப் பேசி சங்கம் முன்வைத்த கோரிக்கைகளை விரைவில் செயல்படுத்துவதாக உறுதியளித்தார்.

துறைவாரி தோழமைச் சங்க நிர்வாகிகள் பெருந்திரள் முறையீடு கோரிக்கைகள் வெற்றி பெற வாழ்த்திப் பேசினார்கள். தமிழ்நாடு திருக்கோயில் நிருவாக அதிகாரிகள் சங்கத்தின் மாநிலத் தலைவர் சுரேஷ்குமார் நமது இரண்டு சங்கங்களும் இணைந்து ஒற்றுமையாக இணைந்து போராடி பொதுவான கோரிக்கைகளை வென்றெடுக்க வேண்டும் என்று கூறினார். தமிழ்நாடு வேளாண்மைத்துறை சங்கத்தின் மாநிலத் தலைவர் தோழர் உ.சுமதி தனது வாழ்த்துரையில் அரசுத்துறைகளில் காலிப்பணியிடங்கள் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. ஊழியர்கள் பணிச்சுமையுடன் பணியாற்றுகின்றார்கள். தொடர்ந்து புள்ளி விவரம் கேட்டு சீராய்வுக்கூட்டங்கள் நடத்திக்கொண்டே இருக்கிறார்கள். இதனால் அரசு ஊழியர்கள் மன அழுத்தத்திற்கு ஆளாவதாக தெரிவித்தார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் தென்சென்னை மாவட்டத் துணைத் தலைவர் தோழர் முத்துக் குமரசாமிவேல் பேசுகையில் அரசுப்பணியாகவும், அறப்பணியாகவும் பணியாற்றக்கூடிய அறநிலைத்துறை ஊழியர்களின் கோரிக்கைகள் வென்றெடுக்க தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் எப்போதும் துணை நிற்கும் என்று பேசினார். சிறப்புரையாற்றிய தமிழ்நாடு தலைமைச் செயலக சங்கத்தின் மாநிலத் தலைவர் தோழர் கு. வெங்கடேசன் பேசுகையில் கடந்த ஆட்சியில் போராடும் சங்கங்களை அழைத்துப் பேச மறுத்த நிலையில் அறநிலையத்துறை ஆணையர் சங்க நிர்வாகிகளை அழைத்துப் பேசியுள்ளார். உங்கள் ஒற்றுமைக்கு கிடைத்த வெற்றியாக பார்க்கவேண்டும். நாம் ஒற்றுமையுடன் போராடி பழைய ஓய்வூதியத்தை திரும்ப பெறவேண்டும். அதற்கு ஜேக்டோ ஜியோ போராட்டங்களில் நாம் பங்கேற்க வேண்டும் என்றும், அரசு ஊழியர்களுக்கு தலைமைச் செயலக சங்கம் எப்போதும் துணை நிற்கும் என்று பேசி அனைவரையும் உற்சாகப்படுத்தினார். நிறைவாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மு.அன்பரசு தனது நிறைவுரையில் திமுக அரசு தனது தேர்தல் வாக்குறுதியில் தெரிவித்த எதையும் ஆட்சிக்கு வந்து இரண்டரை ஆண்டுகாலமாக நிறைவேற்றவில்லை. பழைய ஓய்வூதியம், சரண்டர், டிஏ உள்ளிட்ட உரிமைகளை பாதுகாக்கவே போராடவேண்டியுள்ளது. சத்துணவு அங்கன்வாடி உள்ளிட்ட பணியாளர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்குவதாக வாக்குறுதியளித்து நிறைவேற்றாமல் ஏமாற்றுவது நியாயமல்ல என்றும் வருகின்ற அக்டோபர் 7 ம் தேதி செங்கல்பட்டு மாவட்டத்தில் நடைபெற உள்ள மாநில பிரதிநிதித்துவ பேரவை, நமது கோரிக்கைகளை வென்றெடுக்கும் களத்தினை தீர்மானிக்கும் என்றும், இது நிறைவு அல்ல துவக்கம் என்றும், அறநிலையத்துறை ஊழியர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் உறுதுணையாக நிற்கும் என்றும், தமிழ்நாடு அரசு ஊழியர்சங்கத்தின் அனைத்து இயக்கங்களிலும் அறநிலையத்துறை ஊழியர்கள் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்றும், எழுச்சியாக நிறைவுரையாற்றினார். மேற்படி சங்கத்தின் மாநிலப் பொருளாளர் திரு.பாலமுருகன் நன்றியுரையாற்றிட பெருந்திரள் முறையீடு இயக்கம் நிறைவுபெற்றது. ●



# எது உயர்வைக் கொடுக்கும்?


**– பெரணமல்லூர் சேகரன்**

செக்கோஸ்லேவேகியாவில் உதித்த ஜூலியஸ் பூசிக் தமது 12ஆம் வயதிலேயே இலக்கியங்களைப் படைத்தவர். செக்கோஸ்லேவேகியா கம்யூனிஸ்ட் கட்சியின் மாணவர் சங்கத்தில் பணியாற்றியவர். பத்திரிக்கையாளராகவும் போராளியாகவும் திகழ்ந்த பன்முகத் தன்மை வாய்ந்த தோழர்.

1929 ஆம் ஆண்டு நடைபெற்ற சுரங்கத் தொழிலாளர்களின் வீரஞ்செறிந்த வேலைநிறுத்தப் போராட்டத்தில் பங்கேற்றுச் சமர் செய்தவர். இரண்டாம் உலகப் போரில் நாஜிகளின் எதிர்ப்பு முன்னணியில் முனைமுகத்து நின்றவர். அவரது வீரம்மிக்க செயல்பாடுகளால் கொதித்த நாஜிகள் 1942ஆம் ஆண்டில் ஜூலியஸ் பூசிக்கைச் சிறையில் அடைத்தனர். சிறையிலிருந்தபோதே 'தூக்குமேடைக் குறிப்புகள்' எனும் உலகப் புகழ் வாய்ந்த நூலை எழுதினார். சிறையில் கொடுமைப்படுத்தப்பட்ட போதிலும் மனந்தளராது துணிவுடன் எதிர்கொண்ட மகத்தான கம்யூனிஸ்டுகள் விளங்கினார். 1943 ஆம் ஆண்டு செப்டம்பர் 8ஆம் நாள் தூக்கிலிடப்பட்டார். ஜூலியஸ் பூசிக்கிற்கு 1950ஆம் ஆண்டு 'சர்வதேச சமாதானப் பரிசு' வழங்கப்பட்டது. புகழ் வாய்ந்த ஜூலியஸ் பூசிக் சிறந்த கம்யூனிஸ்டாக வாழ்ந்ததனால்தான் வரலாற்றில் நிலைத்து நிற்கிறார். அவர் கம்யூனிஸ்ட் குறித்து கூறுவதைக் கேளுங்கள்....

"கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் மனிதனை நேசிக்கிறோம். மனிதத் தன்மையுள்ள எதுவும் எங்களுக்குப் புறம்பானதல்ல. மிகச் சாதாரண மனித இன்பங்களின் மதிப்பையும் நாங்கள் அறிவோம். அவற்றிலும் நாங்கள் மகிழ்ச்சி காண முடியும். எனவே தான், மனிதன் உழைப்பை மனிதன் பறிக்கும் அராஜக அமைப்பின் கொடுமைகளிலிருந்து, அதாவது, பயங்கரப் போரின் துன்ப துயரங்கள், வேலையில்லாத் திண்டாட்டம் ஆகிய கொடுமைகளிலிருந்து விடுவிக்கப்பட்டு, மகிழ்ச்சியும் நிறைவும், ஆரோக்கியமும் சுதந்திரமும் உள்ள மனிதனுக்கு, இந்தப் பரந்த உலகில் ஒரு இடம் அளிப்பதற்காக, எங்கள் சுகபோகங்களைத் தியாகம் செய்ய நாங்கள் ஒரு போதும் தயங்குவதில்லை. லாபம், லாபம், மீண்டும் லாபம்! இதையே குறிக்கோளாகக் கொண்ட ஒரு அமைப்பு, மக்களுக்கிடையே நேச உறவு நிலவுவதற்குப் பதிலாக, பண உறவையே அடிப்படையாகக் கொண்ட ஒரு அமைப்பு, மக்களுக்கிடையே நேச உறவு நிலவுவதற்குப் பதிலாக, பண உறவையே அடிப்படையாகக் கொண்ட ஒரு அமைப்பு, மனிதனைக் காட்டிலும் பணத்திற்கே அதிக மதிப்பைத் தருகிற ஒரு அமைப்பு மனிதத் தன்மை அற்றதாகும். மனிதனை நேசிக்கிற ஒரு மனிதனுக்கு ஒரு கம்யூனிஸ்டுக்கு, மக்களின் மனிதத் தன்மை பறிக்கப்படுகின்ற பொழுது, சும்மா இருக்க உரிமை உண்டா? இல்லை. எனவேதான், நிறைவும் சுதந்திரமும் பண்பும் பொருந்திய மனிதனுக்காகப் போராடுவதில், தங்கள் முழு வலிமையை பயன்படுத்தவோ, தியாகம் செய்யவோ கம்யூனிஸ்டுகள் பின் வாங்குவதில்லை!" ஜூலியஸ் பூசிக்கின் நினைவு நாளில் அவரின் கூற்றுப்படி சிறந்த கம்யூனிஸ்டாகத் திகழ்வதைவிட கம்யூனிஸ்டுகளுக்கு வேறென்ன உயர்வைக் கொடுக்கும்?

*(செப்டம்பர் 8: ஜூலியஸ் பூசிக் எனும் மகத்தான கம்யூனிஸ்ட் வீரனின் நினைவு நாள்)*



“அந்த அரசியல்வாதி பத்தாயிரம் கோடி ரூபாயை பதுக்கி வச்சிருக்கார்னு இவ்வளவு ஆதரங்கள் இருந்தும் இன்னும் அந்த பணத்தை ஏன் கைப்பற்றாமல் இருக்கிறீர்கள்?”

போலீஸ்:

“அய்யா அவரு, பணத்தை நிலவின் தென்துருவத்தில் பதுக்கி வச்சிருக்காருங்க.”

# சேரிக்கு இன்னும் வரவில்லை தேர்!

**- தோழன்**

வேங்கைவயல், மேல்பாதியில் நிகழ்ந்த சாதிய இழிவுகளை தொடர்ந்து நான்குநேரி சம்பவம் இன்னும் அதிக அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது முன்னவை இரண்டும் ஒரு வகை ஜாதி வெறியும், ஒதுக்குதலும் என்றால் நான்குநேரி சம்பவமானது வன்மம் குரூரம் மனச்சிதைவு ஆகியவற்றின் வெளிப்பாடுகளாக உள்ளது.

தென் மாவட்டங்களில் ஜாதி ரீதியாக மாணவர்கள் கூட்டு சேர்வதும், பிற ஜாதியினரை தாக்குவதும் நெடுங்கால கதை. அதிலும் நான்குநேரியில் சாதிய கொலை போன்ற கொடிய சம்பவங்கள் 1970 களிலேயே நிகழ்ந்துள்ளன. நான்குநேரி பட்டியல் சாதி மக்களின் குடியிருப்பு பகுதியில் உள்ள வழித்தடத்தில் பேருந்து நிறுத்தம் இதுவரை ஏற்படுத்தப்படவில்லை. இதனால் ஊருக்குள் இருக்கும் மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவினரின் வசிப்பிடத்தில் உள்ள பேருந்து நிறுத்தத்திற்கு அன்றாடம் நடந்தே சென்று பேருந்துக்கு ஏறி வள்ளியூரில் உள்ள பள்ளிக்கு சென்றுள்ளனர் பட்டியலின மாணவர்கள். தன்னைத் தாக்கியுள்ள ஆதிக்கசாதி மாணவர்களோடு சேர்ந்து தான் கடந்த 4 ஆண்டுகளாக பேருந்தில் பயணம் செய்து பள்ளி சென்று படித்து இருக்கிறார் சின்னதுரை. ஒன்றாக சென்று வந்தாலும் சின்னதுரையை அவர்கள் அடிமைபோல் நடத்தியுள்ளனர். சீண்டல் அத்துமீறவே சின்னத்துரை பள்ளிக்கு ஒரு வாரம் செல்லவில்லை. படிப்பில் கவனம் செலுத்தக்கூடிய மாணவர் பள்ளிக்கு வராததால் தலைமையாசிரியர் நடந்ததை விசாரித்திருக்கிறார். கணவரால் கைவிடப்பட்டு அன்றாட கூலிக்கு வேலை பார்க்கும் சின்னதுரையின் தாய் தனது மகனை பள்ளிக்கு அழைத்துச் சென்று நடந்ததை விவரித்து புகார் எழுதிகொடுத்திருக்கிறார். இதை அறிந்த ஆதிக்க சாதி மாணவர்களின் உறவினர்கள் சின்னதுரை வீட்டுக்கு வந்து புகாரை திரும்பப் பெறுமாறு மிரட்டியிருக்கிறார்கள். பிறகு இரவு 10 மணிக்கு சின்னதுரை வீட்டுக்குள் சம்பந்தப்பட்ட மாணவர்கள் நுழைந்து அவரை அரிவாளால் வெட்டியுள்ளார் இதனை தடுக்க சென்ற அவரது தங்கையும் அந்த கும்பலால் வெட்டப்பட்டுள்ளார். இந்த சம்பவத்தை பார்த்த சின்னதுரையின் தாத்தா மாரடைப்பால் உயிரிழந்தார். இந்த சம்பவம் ஒட்டுமொத்த தமிழகத்தையே உலுக்கியுள்ளது. சக மாணவனை வெட்டிய அந்த ஆறு சிறுவர்களையும் போலீசார் கைது செய்து கூர்நோக்கு இல்லத்துக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

சம்பவம் நடந்த இடம் என்னவோ நெல்லை மாவட்டமாக இருந்தாலும் மாணவர் மத்தியில் இதுபோன்ற ஜாதி பிரச்சினை தமிழ்நாடு முழுக்கவே இருந்து வருகிறது. ஏற்கனவே தென்காசி மாவட்டம் பான்ஜான்புரம் கிராமத்தில் பட்டியலின சமூகத்தைச் சேர்ந்த பள்ளி மாணவர்களுக்கு தின்பண்டம் தரக்கூடாது என்று ஊர் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது; தர்மபுரியில் தலித் மாணவர்களோடு மாணவர்கள் ஒன்றாக அமர மறுத்து தகராறு செய்தனர்; மதுரை மாவட்டத்தில் வடுகபட்டியில் தலித் மாணவர்கள் வெறும் காலோடு தான் பள்ளிக்கு செல்லவேண்டும் என்ற விபரம் தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணைய அதிகாரிகளின் நேரடி விசாரணையில் தெரியவந்தது; விருதுநகர் மாவட்டம் ராஜபாளையத்தில் உள்ள கம்மாபட்டி பஞ்சாயத்து யூனியன் பள்ளியில் சத்துணவு பணியாளர்கள் இரண்டு பட்டியல் இன பெண்கள் நியமிக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து பிற சாதியினர் தமது பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்ப மறுத்ததால் அந்த இரண்டு பணியாளர்களும் மாற்றப்பட்டனர்; விருதுநகர் மாவட்டம் திருத்தங்கலில் அம்பேத்கர் பற்றிய பாடத்தை நடத்த கூடாது என்று பட்டியலினம் சாராத மாணவர்களால் ஆசிரியர்கள் தடுக்கப்பட்டனர்; மீறி பாடம் நடத்திய ஆசிரியர்களின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது இப்படி நடந்துள்ள சம்பவங்களை பட்டியலிட்டுக் கொண்டே போகலாம் சில தவறான புரிதல்கள் திட்டமிட்டே சுயநலமிகளால் பரப்பப்படுகின்றன. அதில் முக்கியமானது இட ஒதுக்கீட்டு முறை. இது ஏதோ பட்டியலின ஜாதியினருக்கு மட்டுமானது என்ற கருத்து தீய வடிவில் வலம் வருகிறது. இட ஒதுக்கீட்டு முறையை பட்டியலின, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப் பட்டவர்களும் தான் அதிகம் பயன் பெற்றனர் என்ற தோற்றம் வளர்க்கப்பட்டு வருகிறது. சாதி என்பது தவறான கற்பிதம் என்பதை பள்ளிப் பருவத்திலேயே மாணவர்களுக்கு உணர்த்த

வேண்டும். அதற்கு கருத்தியல் தயாரிப்பு முக்கியம். விடுதலைப் போராட்ட காலத்தில் விடுதலையை மையமிட்டு மாணவர்களும் இளைஞர்களும் இணைந்தார்கள் அதன் பின்னர் மொழி உரிமை சார்ந்து இந்த இணைப்பு நிகழ்ந்தது எண்பதுகளுக்குப் பின்னர் உலகமய தாராளமய அலை குறிக்கோளற்ற சமுதயத்தை உருவாக்கிவிட்டது. இன்றைய இளைஞர்கள் மாணவர்களுக்கு இலக்குகள் இல்லை; ஊர்ப்புறங்களில் இருந்த பொது சேவை மன்றங்கள் பொதுநல அமைப்புகள் யாவும் காணாமல் ஆகிவிட்டன; மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும் நம்பிக்கையளிக்கும் கட்சிகள் இல்லை; தலைவர்கள் இல்லை' கொள்கைகள் இல்லை; படித்தால் வேலை வாய்ப்பு இல்லை! இந்நிலையில் இவர்களை அரசியல் சார்ந்த சாதி அமைப்புகள் இவர்களை அபகரித்துவிடுகின்றன.

தொன்னூறுகளில் பள்ளிப் பிள்ளைகள் கைகளில் கயிறுகள் முளைத்தன. பின்னர் அது எங்கும் பரவியது. விநாயகர் ஊர்வலங்கள் முன்னிட்டு அது உருவானது. சாதி அமைப்புகளின் தலைமைகள் உயிர்ப்பு பெற்றபோது சமய கயிறுகள் சாதி கயிறுகளாக மாறின. பள்ளி, கல்லூரிகள், கழிப்பிடங்கள், சுற்று சுவர்களில் எழுதுதல் தொடங்கி, மிதிவண்டி, இருசக்கர வாகனங்களில் குறியீட்டு பெயரில் எழுதுவது நீடிக்கிறது. தமிழ்நாட்டில் பெயர்களுக்குப் பின் சாதிப்பட்டங்கள் போட்டுக் கொள்வது எப்போதோ குறைந்துவிட்டது. சமூகநீதி இயக்கத்தின் கொடை இது. ஆனால் இன்று குழந்தைகளுக்குக்கூட பின்னொட்டாக பட்டப்பெயர்கள் வால் போல் உறுத்துகின்றன. சாதி என்பது ஆயிரம் ஆண்டுகளில் அழுக்கு அது ஒரே துடைப்பத்தால் அதை நீக்கிவிட முடியாது சாதி நடைமுறையும் சாதி இழிவும் இதன் வழிப்பட்ட சாதி வன்முறைகளும் நாகரீகச் சமூகத்திற்கான சவால்கள். இவற்றை முடிவுக்கு கொண்டுவர முறையான உறுதியான சட்ட நடவடிக்கையும் தண்டனையும் அவசியம். தேர்தல் அரசியலில் சாதி சார்ந்த தேர்வுகளை அரசியல் கட்சிகள் கைவிட வேண்டும் திருவிழாக்களில் சாதி, உள்ளூர் பஞ்சாயத்து முறைமையை படிப்படியாக நீக்குதல்; வாகனங்களில் பதிவு எண் விவரங்களை தவிர வேறு எதுவும் எழுதக்கூடாது என அறிவித்தல்; பள்ளி கல்லூரிகளில் கயிறு போன்ற அடையாளங்களை கைவிட செய்தல் போன்றவை அவசியம். சாதிபெயரில் பின்னொட்டு பயன்படுத்துவது சட்ட அடிப்படையில் தடுக்கவேண்டும். சாதி, பட்டப் பெயர்கள் இடம்பெறும் நிகழ்வுகளில் அரசு நிர்வாக பிரதிநிதிகள், அரசியல் தலைவர்கள் பங்கேற்க கூடாது. சமூக ஊடகங்களே சாதிய வன்மத்தை உருவாக்குவதில் பெரும் பங்கு வகிக்கின்றன இதில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும்

பள்ளி கல்லூரிகளில் இலக்கிய மன்றங்கள் நூலக விழாக்கள் விளையாட்டு விழாக்கள் பண்பாட்டு திருவிழாக்களை கூட்டு பங்கேற்புடன் நிகழ்த்துதல் அரசு சார்பில் முன்னெடுக்கப்படும் நிகழ்வுகளில் தொழில்முறை பேச்சாளர்களை தவிர்த்து சமூக பயன்மிக்க ஆளுங்களை பங்கேற்க செய்தல் பள்ளி கல்லூரி அலுவலகங்கள் என எல்லா இடங்களிலும் சாதி பாலினம் பாகுபாட்டுக்கு எதிரான உறுதியான நடவடிக்கைகள் போன்றவை முன்னெடுக்கப்படவேண்டும். விரிவான வாசிப்பு, இலக்கியங்கள், கலை வெளிப்பாடுகள் கள பயணங்கள், கூட்டு ஒன்றுகூடல் உள்ளிட்ட பண்பாட்டு நிகழ்வுகளை எல்லா அளவுகளிலும் அறிமுகப்படுத்த வேண்டும். நேஷனல் நாலெட்ஜ் கமிஷன் அளித்துள்ள பரிந்துரைகளை தமிழக அரசு நடைமுறைப்படுத்த வேண்டும். தெளிவான சிந்தனையும் திட்டமிடலும் இருந்தால் சாதி அரக்கனின் கரங்களிலிருந்து இளம் தலைமுறையை படிப்படியாக மீட்டெடுக்கலாம்.

இவற்றை எல்லாம் உறுதியோடு செய்யாவிட்டால்

**"எத்தனை பேர் கூடி இழுத்தும் என்ன**
**இன்னும் சேரிக்குள் வரவில்லை தேர்!"**

என்ற கவிதையின் ஆற்றாமை தான் காலங்காலத்துக்கு இருக்கும். ●



"வதனமே சந்திர பிம்பமோ...
அவள் மனமோ
நிலவின் தென் துருவமோ..."

# சத்துணவுத்திட்டம் சீர்குலைப்பும் சத்துணவு ஊழியர்கள் இலைக்கழிப்பும்

**- பே.பேயத்தேவன்**

தமிழகத்தில் சென்னை மகாணத்தில் சர்.பி.டி. தியாகராயர் காலத்தில் 1922-இல் மீனவர்கள் குழந்தைகளின் பசியைபோக்கிடும் விதமாக சிங்காரவேலர் அவர்களின் முயற்சியின் அடிப்படையில் மதியஉணவுதிட்டம் துவங்கப்பட்டது. பின் நிதி ஒதுக்கீடு செய்ய இயலாதநிலையில் நிறுத்தப்பட்டது. பின்னர் 1925 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி பகுதியில் முழுவதும் மதிய உணவு விரிவுபடுத்தப்பட்டு முன்னாள் முதல்வர்; காமராஜ் அவர்களால் 1956 ஆம் ஆண்டு 28000 பள்ளிகளில் மதிய உணவு திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. பின்னர் 1962-இல் 8ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கும் மதியஉணவு வழங்கப்பட்டது.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் 01.07.1982-இல் கிராமபுறங்களில் சத்துணவு திட்டமாக மாற்றி செயல்படுத்தினார். 15.09.1982 முதல் நகர்புற பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. 1997 ஆம் ஆண்டு முன்னாள் முதல்வர் காமராஜர், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர், அறிஞர் அண்ணா ஆகியோர்கள் பிறந்த நாட்களுக்கு இனிப்புபொங்கல் வழங்கப்பட்டது. 2006 ஆம் ஆண்டுமுதல் முத்தமிழ் அறிஞர் கருணாநிதி அவர்களால் சத்துணவு திட்டத்தில் வாரம் 2 முட்டைகள் வழங்கும் திட்டம் அமல் படுத்தப்பட்டது.

2014 ஆம் ஆண்டுமுதல் முன்னாள் முதல்வர் செல்வி.ஜெயலலிதா அவர்கள் பல்வகை கலவை சாதத்துடன் மிளகு முட்டை தக்காளி மசாலா முட்டை வழங்கப்பட்டது. தற்போது 42000 மையங்களில் துவக்கப்பள்ளிகளில் 47,98,965 குழந்தைகளும் உயர்நிலைப்பள்ளிகளில் 6,98,066 குழந்தைகள் பயன்பெறுகிறார்கள். பள்ளிசத்துணவுதிட்டம் உலகம் போற்றும் திட்டமாக இன்று செயல்பட்டு வருகிறது. 2022-23-ம் பட்ஜெட்டில் கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட அதே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு முழுவதும் சத்துணவு மையங்களுக்கு பன்மடங்கு விலைவாசி உயர்ந்த நிலையிலும், 04.11.2019 அன்று உணவீட்டு செலவினம் உயர்த்தப்பட்டு 4 ஆண்டுகளுக்கு பின்னும் கூட உயர்த்தாத நிலையே தொடரும் என்று தமிழக அரசு தெளிவுப்படுத்தியுள்ளது என்பது வெளிப்படையாக தெரிகிறது. சத்துணவு ஊழியர்களின் கோரிக்கைகள் இந்த ஆண்டு முழுவதும் நிறைவேற்றவும் வாய்ப்பு இல்லை என்பதும் தெளிவாகிறது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தேர்தல் வாக்குறுதியில் சத்துணவு ஊழியர்களின் 40 ஆண்டு கால கோரிக்கை நாங்கள் ஆட்சிக்கு வந்தால் நிறைவேற்றுவேன் என்று வாக்குறுதி அளித்ததின் அடிப்படையில் சத்துணவு ஊழியர்கள் குடும்பத்துடன் வாக்களித்து இன்று மாண்புமிகு தமிழக முதல்வரால் சத்துணவு ஊழியர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள். பட்ஜெட் கூட்டத்தொடரில் மாண்புமிகு முன்னாள் தமிழக முதல்வர் கருணாநிதி அவர்கள் பிறந்தநாளுக்கு இனிப்புபொங்கல் வழங்க உத்தரவிட்டதை வரவேற்கிறோம். ஆனால் 2015ல் இனிப்புபொங்களுக்கு ரூ.1.70%- உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு ரூ.1.80%-ம் அனுமதிக்கப்பட்டுள்ளது. 8 ஆண்டுகளுக்கு பின்பும் பொங்கல் செலவினத்தை உயர்த்தப்படாதது மிக கவலையோடு பரிசீலிக்கவேண்டியுள்ளது. தற்போது முன்னால் முதல்வர் முத்தமிழ் அறிஞர் கருணாநிதி அவர்களின் பிறந்த நாளுக்கு இனிப்பு பொங்கல் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. ஆனால் இனிப்பு பொங்கல் வழங்குவதற்கு எரிபொருள் இல்லாமல் தயாரித்து வழங்குவதற்கு அரசாணை வழங்கப்பட்டுள்ளது. 27.06.2023 அன்று மாண்புமிகு சமூகநலம் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் மற்றும் உயர் அதிகாரிகள் பேச்சுவார்த்தையில் ஏற்றுக்கொண்டு இனிப்பு பொங்கல் தயாரித்து வழங்க மானியம் உயர்த்தி தருவதாக உத்தரவாதம் அளித்த பின்னர் 15.07.2023 காமராஜர் பிறந்த நாளுக்கும் 14.08.2023 முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவிற்கும் மேற்கண்ட தொகையிலேயே இனிப்பு பொங்கல் வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

• பள்ளிகளில் காலை உணவு சத்துணவு ஊழியர்களிடம் ஒப்படைத்து அரசு செலவை குறைத்து இருக்கலாம்

• அதே போல காலை உணவு திட்டமும் வெற்றிகரமாக செயல்படுத்தபட்டு இந்நாள் முதல்வர் ஸ்டாலின் பெயர் புகழ்பாடும் திட்டமாக இருக்க வேண்டும் என்பதே அனைவரின் விருப்பமும் ஆசையும்கூட காலை உணவு திட்டத்தை அனைவரும் வரவேற்கிறோம் திட்டம் சிறப்பாக செயல்பட வாழ்த்துகிறோம்.

• காலை உணவுதிட்டம் அறிவிப்பு வந்த நாள் முதல் சத்துணவு திட்டத்தில் பணியாற்றுகின்ற ஊழியர்கள் எங்களிடம் ஒப்படையுங்கள் வெற்றிகரமாக செயல்படுத்திகாட்டுகிறோம் என கோரிக்கை வைத்தும் அரசு ஏன் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது தான் விளங்கவில்லை அரசு இக்கோரிக்கையை கனிவுடன் பரிசீலிப்பது அரசுக்கு நல்லது.

• பள்ளி சத்துணவுத் திட்டத்தில் அனைத்து கட்டமைப்பும் தயார் நிலையில் இருக்கும் போது காலை உணவுக்கு பயன்படுத்துவதில் எந்த சிக்கலும் இல்லை ஆனாலும் இவைகளை பயன்படுத்தாமல் தமிழகம் முழுவதும் பல லட்சங்களை ஒதுக்கி நகர் பகுதியில் ஒரு இடத்தில் சமைத்து அனைத்து மையங்களுக்கு வேன் மூலம் வழங்குவதற்கும் இதே நிலையில் மாநகராட்சி பகுதியிலும் நடைமுறைப்படுத்திட அனைத்து பணிகளும் தயார் நிலையில் உள்ளது. மத்திய சமையலறைத் திட்டம் ஏற்கனவே நடத்துவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நினைவுபடுத்துகிறோம். தனியாக மகளிர் சுய உதவி குழு மூலம் அமுல்படுத்த அறிவிப்பு ஆணை வெளியிட்டு இருப்பது சத்துணவு திட்டஊழியர்கள் மத்தியில் சிறிது அதிருப்தியை உருவாக்கவே செய்துள்ளது.

• சத்துணவு ஊழியர்களை அரசுப் பணியாளராக்கி காலமுறை ஊதியம் வழங்கபடும் என்ற தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றுகின்ற வகையில் காலை உணவுத்திட்டத்தை சத்துணவு ஊழியர்களிடம் ஒப்படைத்து அரசு ஊழியராக்கி காலமுறை ஊதியத்தை வழங்க அரசு முன்வரவேண்டும்.

• பள்ளி சத்துணவுத்திட்டத்தில் 40 ஆயிரத்திற்கும் மேல் உள்ள காலிப்பணிகள் பல ஆண்டு காலமாக நிரப்பப்படாமல் உள்ளது. இதன் நோக்கம் என்ன?

• காலை உணவு திட்டத்தை அரசின் அனைத்து தொடக்கப்பள்ளிகளுக்கு அமுல்படுத்த பட்ஜெட்டில் ரூ.500-கோடியை அரசு ஒதுக்கியுள்ளது

• காலை உணவுத்திட்டத்தை சுய உதவி குழு மூலம் சமைக்கும் பணியை செய்பவர்களுக்கு உணவு உண்ணும் மாணவர்கள் எண்ணிக்கை மையத்தின் தூரம் இவைகளை பொருத்து அவர்களுக்கு அரசு மதிப்பூதியத்தை நிர்ணயம் செய்யும் என அரசின் வழிகாட்டு நெறிமுறைகளில் அறிவிக்கபட்டு செயல்படுத்தப்படுகிறது.

• சத்துணவுத்திட்டம், காலை உணவுத்திட்டம் தயாரித்து வழங்குவதற்கு கீழ்கண்ட வித்தியாசம் ஏன்? 40 ஆண்டு காலமாக சத்துணவுத் திட்டத்தை உலகம் போற்றும் திட்டமாக நடைபெற்று வருகின்ற வேலையில் தமிழகம் முழுவதும் விலைவாசி என்பது ஒரே மாதிரி இருக்கும் போது அரிசி 100 கிராம் முதல் 150 கிராம் பயன்படுத்தி உணவு தயாரித்து வழங்கும் பள்ளி சத்துணவுத்திட்டத்திற்கு உணவு தயாரித்து வழங்க காய்கறி மற்றும் மளிகை சாமான்கள் வாங்குவதற்கு ரூ.1.21, ரூ.1.61ம் மற்றும் எரிபொருளுக்கு 0.54பைசாவும் வழங்கப்பட்டு வருகிறது. (04.11.2019 முதல்)

• தற்போது காலை உணவுத்திட்டத்திற்கு காய்கறி மற்றும் மளிகை சாமான்கள் வாங்குவதற்கு ரூ.2.43 மற்றும் எரிபொருளுக்கு ரூ.1.25 வழங்கப்பட்டு வருகிறது. காலை உணவுத்திட்டம் தயாரித்து வழங்குவதற்குரிய செலவினத்தை காட்டிலும் பள்ளிகளில் நடைமுறைப்படுத்தும் சத்துணவு தயாரித்து வழங்குவதற்கு 3ல் ஒரு பங்கு மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளது. விலைவாசி 2 ஆண்டுகளில் பலமடங்கு ஏறியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்நிலை தொடர்ந்தால் பள்ளிக் குழந்தைகள் காலை உணவுத்திட்டத்தினையே விரும்புவார்கள் முன்னால் முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் மூட வேண்டிய நிலை ஏற்படுமே... முன்னால் முதல்வர் காமராஜர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர், முத்தமிழ் அறிஞர் கருணாநிதி, செல்வி.ஜெ.ஜெயலலிதா ஆகியோர் பேராசையோடு செயல்படுத்திய உலகம் போற்றும் சத்துணவுத்திட்டம் என்பதை யாரும் மறுக்க முடியுமா? மாண்புமிகு தமிழக முதல்வர்

அவர்கள் கனிவுடன் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுகிறோம்.

சத்துணவு ஊழியர்களின் 40 ஆண்டுகால கோரிக்கைகள் தேர்தலுக்கு முன்பு நியாயமாக தெரிந்தது. தேர்தலுக்குப் பின் 2 ஆண்டுகள் முடிந்த பின் நிறைவேற்ற முன்வராமல் சத்துணவுத்திட்டம் தொடர்ந்து செயல்படுமா? என்ற கேள்விக்குறியோடு சத்துணவு ஊழியர்கள் திண்டாடிக் கொண்டு இருப்பதை மீண்டும் நினைவுப்படுத்திட தமிழகம் முழுவதும் சத்துணவு ஊழியர்கள் போராடுவதை தவிர வேறு வழியில்லாமல் 26.06.2023 முதல் 28.06.2023 வரை சென்னையில் 72 மணி நேர உண்ணாவிரதம் நடத்திய போது 22 சத்துணவு ஊழியர்கள் மயக்க நிலையை எட்டி மருத்தவசிகிச்சை செய்த பின் மாண்புமிகு சமூகநலம் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர், அரசு செயலாளர், இணை இயக்குநர் ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தி போராட்ட களத்திற்கே வருகை தந்து ஒரு மாத காலத்திற்குள் நிர்வாகத்தினால் நிறைவேற்ற முடியும் கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் என்றும் எரிவாயு சிலிண்டருக்கான செலவினம் உயர்த்தி தரப்படும் என்றும் காய்கறி மளிகைக்கான செலவினம் உடனே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் மேலான கவனத்திற்கு கொண்டு சென்று நிறைவேற்றித் தருவோம் என்ற வாக்குறுதியும் இன்னும் முழுமையாக செயல்படுத்தவில்லை.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தேர்தல் வாக்குறுதியில் சத்துணவு ஊழியர்களுக்கு ஊதிய உயர்வும், பதவி உயர்வும் அளித்து அரசு ஊழியர்களாக்கிட வேண்டும், குறைந்தபட்ச குடும்ப பாதுகாப்புடன் கூடிய ஓய்வூதியம்வழங்கவேண்டும். ஒட்டுமொத்த தொகை ரூ.5 லட்சமும், சமையலர், உதவியாளர்களுக்கு மூன்று லட்சம் ரூபாயும் வழங்கவேண்டும், காலி பணியிடங்களை நிரப்ப வேண்டும் என்ற சத்துணவு ஊழியர்களின் 40 ஆண்டு கால கோரிக்கை நாங்கள் ஆட்சிக்கு வந்தால் நிறைவேற்றுவேன் என்று வாக்குறுதி அளித்ததின் அடிப்படையில் சத்துணவு ஊழியர்கள் குடும்பத்துடன் வாக்களித்து ஒரு அமைப்பாளர்க்கு தற்போது குறைந்தபட்ச ஊதியம் வழங்கினால் மாதமொன்றுக்கு ரூ.2070 மட்டுமே கூடுதல் செலவினம் ஏற்படும். தற்போது வழங்கப்படும் சிறப்பு ஓய்வூதியம் ரூ.2000 (நாளொன்றுக்கு ரூ.66.70 மட்டுமே) காலி பணியிடங்கள் நிரப்பப்படாமல் ஒரு அமைப்பாளர் 4 அல்லது 6 மையம் வரை கூடுதல் பொறுப்பு பார்க்க வேண்டிய நிலை உள்ளது. மேலும் காலி பணியிடங்கள் நிரப்பப்படாததால் சமையலர் மற்றும் உதவியாளர்கள் விடுப்பு எடுத்தால் சமைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்பது இன்று மாண்புமிகு தமிழக முதல்வரால் சத்துணவு ஊழியர்கள் ஏமாற்றப்பட்டுள்ளார்கள். எனவே இனியும் காலம் தாழ்த்தாது சத்துணவு ஊழியர்களின் வாழ்வாதார கோரிக்கைகளை நிறைவேற்றவும் காலை உணவுத்திட்டத்தை பள்ளி சத்துணவுத்திட்டத்திலேயே செயல்படுத்தவும் வலியுறுத்தி 18.08.2023 அன்று அனைத்து ஊராட்சி ஒன்றிய / நகராட்சி ஆணையாளர்களிடம் பெருந்திரள் முறையீடு வழங்கப்பட்டது. 30.08.2023 அன்று மாவட்ட தலைநகரங்களில் பெண்கள் தலைமையில் மடியேந்தும் போராட்டம், கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி எழுச்சியோடு நடத்தப்பட்டது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சத்துணவு ஊழியர்களின் கோரிக்கையை பரிசீலித்து நிறைவேற்றிட முன்வர வேண்டுகிறோம். ●

## அஞ்சலி



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் திருப்பூர் மாவட்ட துணைத் தலைவரும், தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாவட்டத் தலைவரும், தாராபுரம் வருவாய் கோட்ட கலால் அலுவலருமான **தோழர் ச. முருகதாஸ்** 20 - 08 - 2023 அன்று காலை 8.30 மணியளவில் காலமானார்.அவரின் மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து கொள்கிறோம்.

- மாநில மையம்.

# மாவட்ட பிரதிநிதித்துவப் பேரவை

**கரூர்**

கரூர் மாவட்டப்பேரவை 06.08.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று கரூர், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கக் கட்டிடத்தில் காலை 11.00மணிக்கு துவங்கி மாலை 06.30வரை நடைபெற்றது. பேரவைக்கு பொறுப்பு மாவட்டத் தலைவர் தோழர்.எம்.எஸ். அன்பழகன் தலைமை தாங்கினார். பேரவையின் முதல் நிகழ்வாக அகில இந்திய அரசு ஊழியர் சம்மேளனக் கொடியினை சங்கத்தின் மாநிலத் துணைத்தலைவர் தோழர்.மொ.ஞானத்தம்பி அவர்களும், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கொடியினை சங்கத்தின் மாநிலத் துணைத்தலைவர் தோழர்.மு.செல்வராணி அவர்களும் ஏற்றிவைத்தனர். தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு, மாவட்ட இணைச்செயலாளர் தோழர்.கே.இளங்கோ அஞ்சலி தீர்மானம் வாசித்தார். மாவட்ட துணைத்தலைவர் தோழர்.சி.கண்ணன் வரவேற்புரையாற்றினார். பேரவையினை துவக்கிவைத்து மாநிலத்துணைத்தலைவர் தோழர்.மொ.ஞானத்தம்பி துவக்கவுரையாற்றினார். மாவட்ட செயலாளர் தோழர்.கெ.சக்திவேல் வேலைஅறிக்கையினை சமர்ப்பித்தார். மாவட்டப்பொருளாளர் தோழர்.பொன்.ஜெயராம் நிதிநிலை அறிக்கை சமர்ப்பித்தார்.

தோழமை சங்க நிர்வாகிகள் வாழ்த்துரை வழங்கினர். பேரவையை நிறைவுசெய்து சங்கத்தின் மாநிலத் துணைத்தலைவர் தோழர்.மு.செல்வராணி அவர்கள் நிறைவுரையாற்றினார். இறுதியாக மாவட்ட பொருளாளர் தோழர்.எல். பாலசுப்பிரமணி நன்றியுரையாற்றினார்.'

பேரவையில் மாவட்டத்தலைவர் தோழர். மு.சுப்பிரமணியன் மற்றும் மாவட்டச்செயலாளர் தோழர்.கெ.சக்திவேல் ஆகியோர் பணிஓய்வு பெற்றதாலும், மாவட்டத்துணைத்தலைவர் தோழர்.என்.வெங்கடாச்சலம் நிர்வாக காரணங்களினால் பணிநீக்கத்தில் இருந்துவருவதாலும் ஏற்பட்ட காலிப்பணியிடத்தில் ஏற்கனவே மாவட்டத் துணைத்தலைவராக இருந்து பொறுப்பு மாவட்டத் தலைவராக பணியாற்றிவந்த தோழர்.எம்.எஸ்.அன்பழகன் அவர்கள் மாவட்டத்தலைவராகவும், மாவட்டப் பொருளாளராக பணியாற்றிய தோழர்.பொன். ஜெயராம் மாவட்டச் செயலாளராகவும் தேர்வுசெய்யப்பட்டனர். மாவட்டப்பொருளாளராக மாவட்ட இணைச்செயலாளராகப் பணிபுரிந்துவந்த தோழர்.எல்.பாலசுப்பிரமணி தேர்வுசெய்யப்பட்டார். மற்றும் மாவட்ட துணைத் தலைவர், மாவட்ட இணைச் செயலாளர் காலியிடங்களில் புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

மாவட்ட இணைச்செயலாளர் தோழர்.ஆர். முத்துமாரி அவர்கள் மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளராகத் தேர்வு செய்யப்பட்டார். பேரவையின் இறுதி நிகழ்வாக பணிநிறைவு பெற்ற மாவட்டச்செயலாளர் தோழர்.கெ.சக்திவேல், மற்றும் தமிழ்நாடு அரசு அனைத்து மருந்தாளுநர் சங்கத்தின் மாவட்டத்தலைவரும் மண்மங்கலம் வட்டக்கிளைத் தலைவருமான தோழர்.ஆர். சுரேஷ்குமார் ஆகியோருக்கு மாவட்ட மையத்தின் சார்பில் பணிநிறைவு பாராட்டுவிழா நடைபெற்றது. பணிநிறைவு பெற்ற தோழர். கெ.சக்திவேல் மற்றும் தோழர்.ஆர்.சுரேஷ்குமார் ஆகியோருக்கு மாவட்ட மையத்தினால் கௌரவிக்கப்பட்டு நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டது.

**மதுரை**

மாவட்ட பிரதிநிதித்துவப் பேரவை 12.8.2023 அன்று மாவட்டத் தலைவர் தோழர் ஜெ. மூர்த்தி தலைமையில் நடைபெற்றது. அஞ்சலி தீர்மானத்தை மாவட்ட இணைச் செயலாளர் தோழர் மு. ராமதாஸ் வாசித்தார். மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் தோழர். தீ.ராஜி வரவேற்புரையாற்றினார். மாவட்ட பிரதிநிதித்துவப் பேரவையை

தொடங்கி வைத்து மாநில துணைத் தலைவர் தோழர் மொ.ஞானத்தம்பி உரையாற்றினார். வேலை அறிக்கையினை மாவட்டச் செயலாளர் தோழர் க.நீதிராஜா அவர்களும், வரவு-செலவு அறிக்கையினை மாவட்டப் பொருளாளர் தோழர் ச. சந்திரபோஸ் அவர்களும் முன் வைத்தனர். அதனைத் தொடர்ந்து 4 பெண்கள் உட்பட 10 பிரதிநிதிகள் விவாதத்தில் பங்கேற்றனர். மாவட்ட பிரதிநிதித்துவப் பேரவையை வாழ்த்தி தோழர் இரா. லெனின், மாவட்டச் செயலாளர், CITU, தோழர் பெ. சீனிவாசன், மாவட்டச் செயலாளர் TNPTF, தோழர் சு. கிருஷ்ணன், மாவட்டச் செயலாளர் TNGPA உரையாற்றினர்.மாவட்டதுணைத் தலைவர்கள் தூ. முருகன், பெ. சந்திரபாண்டி, த. மனோகரன், ஜெ. மகேந்திரன், மாவட்ட இணைச் செயலாளர்கள் தோழர்கள் தோழர்கள் ஆ. அமுதா, சி. பெரியகருப்பன் ஆசியர் தீர்மானங்கள் முன்மொழிந்தனர். பொதுச்செயலாளர் தோழர் ஆ.செல்வம் நிறைவுரையாற்றினார். மாவட்ட இணைச் செயலாளர் தோழர் ஆ. பரமசிவன் நன்றி கூற பேரவை இனிதே நிறைவுபெற்றது.

**வடசென்னை**

19.8.2023 அன்று வடசென்னை மாவட்ட பிரதிநிதித்துப் பேரவை மாவட்டத் தலைவர் தோழர் வே. விஜயகுமரன் தலைமையில் எழும்பூரில் நடைபெற்றது. அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளன கொடியினை மாநிலத் தலைவர் தோழர் மு. அன்பரசு அவர்களும், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கொடியினை மாவட்டத் தலைவர் தோழர் வே. விஜயகுமரன் அவர்களும் ஏற்றி வைத்தனர். மாவட்ட இணைச்செயலாளர் தோழர் ஆ. கோபிநாதன் வரவேற்புரையாற்றினார்.மாவட்ட இணைச் செயலாளர் தோழர் ஜி. மகேந்திரன் அஞ்சலி உரையாற்றினார். மாவட்ட பேரவையை தொடங்கி வைத்து மாநிலச் செயலாளர் தோழர் அண்ணா.குபேரன் உரையாற்றினார். வேலை அறிகையை மாவட்டச் செயலாளர் தோழர் ம. அந்தோணிசாமி அவர்களும் வரவு-செலவு அறிக்கையை மாவட்டப் பொருளாளர் தோழர் த. ஏழுமலை அவர்களும் முன்வைத்தனர். மாவட்ட துணைத் தலைவர்கள் தோழர்கள் விவேகானந்தன், குணசேகரன், மாவட்ட இணைச் செயலாளர்கள் தோழர்கள் ஜெ. சரஸ்வதி, சு. சிவகுமார், ஜி. மகேந்திரன், சுந்தரமூர்த்தி, மற்றும் பகுதிக்குழு நிர்வாகிகள் தீர்மானங்களை முன்மொழிந்தனர். விவாதத்தில் 7 பேர் பங்கேற்றனர்.

**தஞ்சாவூர்**

26.08.2023 அன்று தஞ்சாவூர் மாவட்டப் பிரதிநிதித்துவப் பேரவை மாவட்டத் தலைவர் தோழர் சிவ.ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கொடியினை மாநிலச் செயலாளர் தோழர் ச.ஹேமலதா அவர்களும், அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனக் கொடியினை மாநிலச் செயலாளர் ச.கோதண்டபாணி அவர்களும் ஏற்றி வைத்து தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தினர். மாவட்ட இணைச் செயலாளர் தோழர் ஆ.செந்தில்குமார் வரவேற்புரையாற்றினார். மாவட்ட துணைத் தலைவர் தோழர் பா. முருகன் அஞ்சலி தீர்மானத்தை வாசித்தார். மாநிலச் செயலாளர் தோழர் ச. கோதண்டபாணி மாவட்ட பேரவையை தொடங்கி வைத்து உரையாற்றினார். வேலை அறிக்கையினை மாவட்டச் செயலாளர் தோழர் ஆ. ரெங்கசாமி அவர்களும், வரவு-செலவு அறிக்கையினை மாவட்டப் பொருளாளர் கு. பாஸ்கரன் அவர்களும், மகளிர் துணைக்குழு அறிக்கையினை மாவட்ட அமைப்பாளர் தோழர் ஏ.ஆர். கவிதா அவர்களும் முன்வைத்தனர். பிரதிநிதிகள் விவாதங்களுக்குப் பிறகு அறிக்கை ஏற்கப்பட்டது.

தமிழ்நாடு ஆரம்பபள்ளி ஆசிரியர் கூட்டணியின் மாநில துணைத் தலைவர் தோழர் பா. இரவிச்சந்திரன், அகில இந்திய இன்சூரன்ஸ் ஊழியர் சங்க தஞ்சை கோட்டத் தலைவர் தோழர் எஸ். செல்வராஜ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். மாவட்ட துணைத் தலைவர்கள் தோழர்கள் எஸ். தமிழ்வாணன், தி. இரவிச்சந்திரன் மாவட்ட இணைச் செயலாளர்கள் தோழர்கள் எஸ். மகேஷ், எஸ். அறிவழகன், மாநில செயற்குழு உறுப்பினர் தோழர் வி. தும்பிஅய்யா மற்றும் செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட மகளிர் துணைக்குழு உறுப்பினர்கள் தீர்மானங்களை முன் மொழிந்தனர்.

மாவட்ட இணைச் செயலாளராக செயலாற்றிய தோழர் எஸ். அறிவழகன் வயது முதிர்வின் காரணமாக பணி ஓய்வு பெற்றதனால் ஏற்பட்டிருந்த காலியிடத்திற்கு தஞ்சை வடக்கு வட்டத் தலைவர் தோழர் டி. இளங்கோவன் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டார். மாவட்டப் பேரவையில் பணி ஓய்வுபெற்ற முன்னாள் மாவட்ட துணைத்தலைவர் தோழர் எம்.என். சாந்தாராமன், முன்னாள் மாவட்ட இணைச் செயலாளர் தோழர் எஸ். அறிவழகன், ஒரத்தநாடு முன்னாள் வட்டத் தலைவர் தோழர் ஆர். சிற்றரசு, தஞ்சை தெற்கு முன்னாள் வட்ட துணைத்தலைவர் தோழர் சி.ஜோதி, திருவிடைமருதூர் முன்னாள் வட்டத் துணைத்தலைவர் தோழர் எம்.மஞ்சு, பட்டுக்கோட்டை முன்னாள் வட்டத் துணைத்தலைவர்கள் தோழர் ஆர். சாந்தலிங்கம், தோழர் பா. சோமசுந்தரம் ஆகியோருக்கு பணி ஓய்வு பாராட்டு விழா நடைபெற்றது. முன்னாள் மாநிலச் செயலாளர் தோழர் இரா. பன்னீர்செல்வம் பாராட்டுறை நிகழ்த்தினார். மாநிலச்செயலாளர் தோழர் ச. ஹேமலதா சிறப்புரை ஆற்றினார். பணி ஓய்வு பெற்றவர்களுக்கு நினைவு பரிசு வழங்கி மாநிலத் தலைவர் தோழர் மு. அன்பரசு நிறைவுரையாற்றினார். இறுதியாக மாவட்ட இணைச் செயலாளர் தோழர் ஆ. தமிழ்வாணன் நன்றி கூறினார். இப்பேரவையில் 128 பிரதிநிதிகள் உள்ளிட்ட 150 பேர் கலந்து கொண்டனர்.

**திருச்சி**

திருச்சி மாவட்ட பிரதிநிதித்துவப் பேரவை 26.08.2023 அன்று மாவட்டத் தலைவர் முனைவர் கா. பால்பாண்டி தலைமையில் தோழர் எம். ஆர். அப்பன் இல்லத்தில் நடைபெற்றது. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கொடியினை மாநிலத் தலைவர் மு. அன்பரசு எற்றி வைத்து மாவட்ட மைய அலுவலகத்தை திறந்து வைத்தார். மாவட்ட இணைச் செயலாளர் தோழர் அமுதவல்லி அஞ்சலி தீர்மானத்தை வாசித்தார்.மாவட்ட துணைத் தலைவர் தோழர் சிவசங்கர் வரவேற்புரையாற்றினார். மாநில துணைத் தலைவர் தோழர் ஆ. பெரியசாமி பேரவையை தொடங்கி வைத்து உரையாற்றினார். வேலை அறிக்கை மாவட்டச் செயலாளர் தோழர் பி.பழனிச்சாமி அவர்களும், வரவு-செலவு அறிக்கையினை மாவட்டப் பொருளாளர் சி.அ. பாபு அவர்களும் மகளிர் துணைக்குழு அறிக்கையினை மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் தோழர் சத்தியவாணி அவர்களும் சமர்ப்பித்தனர். விவாதத்தில் 10 பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

சிஐடியு மாநகரச் செயலாளர் தோழர் எஸ். ரெங்கராஜன், தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் தோழர் பிரேம்குமார், அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்கத்தின் மாநிலச் செயலாளர் தோழர் எம்.வி. செந்தமிழ்ச்செல்வன், மாவட்டத் தலைவர் தோழர் எம். சிராஜூதீன், தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை சாலைப்பணியாளர் சங்கத்தின் மாநில துணைத் தலைவர் தோழர் மகேந்திரன், மேனால் மாநில துணைத் தலைவர் தோழர் கே.எம். தியாகராஜன், முன்னாள் மாவட்டப் பொருளாளர் தோழர் சுந்தரராஜ் ஆகியோர் வாழ்த்துரையாற்றினார். மாநிலத் தலைவர் தோழர் மு. அன்பரசு சிறப்புரையாற்றினார். மாநிலப் பொருளாளர் தோழர் எம். பாஸ்கரன் நிறைவரையாற்றினார். மாவட்டத் துணைத்தலைவர் தோழர் எம். சகாதேவன் நன்றயுரையாற்றினார்.

**கிருட்டினகிரி**

மாணிக்க ஆண்டு மாவட்ட பிரதிநிதித்துவ பேரவை 26.08.2023, சனிக்கிழமை அன்று தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க கட்டடத்தில் நடைபெற்றது.கொடியேற்ற முழக்கத்துடன் தொடங்கிய மாவட்ட பிரதிநிதித்துவப் பேரவையில் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் கொடியினை மாநில செயலாளர் தோழர். சா.டானியல்ஜெயசிங் அவர்களும், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் கொடியினை மாவட்ட தலைவர் தோழர். B.சந்திரன் அவர்களும் கொடியேற்றி வைத்து தியாகிகள் ஸ்தூபிக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு பேரவை துவங்கப்பட்டது. பேரவைக்கு மாவட்ட தலைவர் தோழர். B.சந்திரன் தலைமை தாங்கினார். அஞ்சலி தீர்மானத்தை மாவட்ட இணை செயலாளர் தோழர் C.கோவிந்தராஜ்

வாசித்தார். மாவட்ட மகளிர் துணைக் குழு அமைப்பாளர் தோழர். K.ஜெகதாம்பிகா வரவேற்புரையாற்றினார், மாநிலத் துணை பொதுச்செயலாளர் தோழர். மு.சீனிவாசன் துவக்க உரையாற்றி பேரவையை துவக்கி வைத்தார்.

பின்னர் செயலாளர் அறிக்கையினை மாவட்ட செயலாளர் தோழர். சி.கல்யாணசுந்தரம், அவர்களும், பொருளாளர் அறிக்கையினை மாவட்ட பொருளாளர் தோழர். ம.நந்தகுமார், அவர்களும் சமர்ப்பித்தனர். அறிக்கை மீதான விவாதத்தில் ஏழு தோழர்கள் பங்கேற்றனர். அறிக்கை மீதான விவாதங்களுக்கு தொகுப்புரை வழங்கிய பின்பு அறிக்கைகளுக்கு ஏக மனதாக கரவொலி மூலம் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மேனாள் மாநில தணிக்கையாளர் தோழர். R.நடராஜன் அவர்கள் பங்கு பெற்று வாழ்த்துரை வழங்கினார். இந்திய தொழிற்சங்க மையத்தின் மாவட்ட செயலாளர் தோழர். N.ஸ்ரீதர் அவர்களும் இந்திய வங்கி ஊழியர் சம்மேளனத்தின் அகில இந்திய துணை பொதுச்செயலாளர் S.ஹரிராவ் அவர்களும், BSNLEU சங்கத்தின் மாநில உதவி செயலாளர், தோழர். M.பாபு, அவர்களும், தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர் சங்கத்தின் மாவட்ட தலைவர் தோழர். M. சரவணன் அவர்களும், கிருட்டினகிரி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் தோழர். வேடியப்பன் அவர்களும், தமிழ்நாடு கூட்டுறவுத்துறை ஊழியர் சங்கத்தின் மாநில மகளிர் துணைக்குழு அமைப்பாளர் தோழர்.K.தேவிசோனா அவர்களும் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினார்கள். நடவடிக்கை மற்றும் கோரிக்கை தீர்மாணங்கள் முன்மொழியப்பட்டு ஏக மனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதனை தொடர்ந்து மாவட்ட நிர்வாகிகள் காலி இடத்திற்கான புதிய நிர்வாகிகள் முன்மொழியப்பட்டு தேர்வு செய்யப்பட்டனர். அதனடிப்படையில் மாவட்ட துணை தலைவர்களாக தோழர். R. கோபாலகண்ணன், மற்றும் S.முருகேசன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். நிறைவாக மாநில செயலாளர் தோழர். சா.டானியல்ஜெயசிங் அவர்கள் நிறைவுரையாற்றினார். இறுதியாக மாநில செயற்குழு உறுப்பினர் தோழர். K.C.A. தினேஷ் அவர்கள் நன்றி கூறி பேரவையை நிறைவு செய்தார்

**திண்டுக்கல்**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் திண்டுக்கல் மாவட்ட பேரவை மாவட்ட தலைவர் முபாரக் அலி தலைமையில் 2.9.2023 அன்று நடைபெற்றது மாவட்ட துணைத் தலைவர் K.பிச்சை வேல் வரவேற்புரையாற்றினார் பேரவையை மாநில பொருளாளர் மு.பாஸ்கரன் துவக்கி வைத்தார் மாவட்ட செயலாளர் MP விவேகானந்தன் மாவட்ட பொருளாளர் எஸ். குப்புசாமி ஆகியோர் அறிக்கை சமர்ப்பித்தனர் மாவட்ட துணைத் தலைவர்கள் மா.சுகந்தி டி.ராஜமாணிக்கம் வி.வல்லவன் மாவட்ட இணைச் செயலாளர்கள் D.மகாலிங்கம் V. ஜெயபால் K.மகாராஜா ஆகியோர் தீர்மானங்கள் முன்மொழிந்தனர் K.பிரபாகரன் மாவட்ட செயலாளர் CITU T.வாஞ்சிநாதன் கோட்ட துணை தலைவர் AIIEA ஜான் சிரில் மாவட்ட பொருளாளர் TNGPA ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர் மாநிலத் துணைத் தலைவர் மொ.ஞானத்தம்பி நிறைவுரை ஆற்றினார் மாவட்ட இணைச் செயலாளர் எஸ் ராசாத்தி நன்றி கூறினார்.

அக்டோபர் ஏழாம் தேதி செங்கல்பட்டு நகரில் நடைபெறும் மாநிலப் பிரதிநிதித்துவ பேரவையில் பேரவை உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்வது என்றும் முடிவு செய்யப்பட்டது ●

**PARLIAMENT**



“நிலவின் தென்துருவத்தில் டோல்கேட் அமைக்கப்படும்.”

கட்டுரை

# காலை உணவுத்திட்டம் தமிழ் நாட்டின் கம்பிரம்!

**- குணா**

தமிழ்நாட்டில் 1920இல் பள்ளிகளில் அரசுப் பள்ளிகளில் பொது உணவு திட்டம் நீதிக் கட்சியின் சர் பிட்டி தியாகராயரின் ஆட்சியில் இந்தியாவிலேயே முதன் முறையாக அறிமுகப் படுத்தப்பட்டு பின்னர் அது நிதிப் பற்றாக்குறை காரணமாக கைவிடப்பட்டது. பின்னர் 1957ல் அன்றைய முதல்வர் காமராஜர் ஆட்சிக் காலத்தில் மீண்டும் மதிய உணவு திட்டம் தொடங்கப்பட்டது. எம்.ஜி.ஆர்.காலத்தில் இது சத்துணவு திட்டமாக உருவெடுத்தது மு.கருணாநிதி மற்றும் ஜெ.ஜெயலலிதா ஆகியோரின் ஆட்சிக் காலங்களில் முட்டை காய்கறிகள் வாழைப்பழத்துடன் கூடிய உணவு, கலந்த சாதம் என இத்திட்டம் பல மேம்பாடுகளை கண்டு வந்துள்ளது அதைத் தொடர்ந்து தற்போது அரசு பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை இருந்து வந்தது.

தமிழ்நாட்டில் உள்ள 1545 அரசு தொடக்கப்பள்ளிகளில் பயிலும் சுமார் 1,14,000 மாணவர்கள் மாணவர்கள் பயன்பெறும் வகையில் முதலமைச்சரின் காலை உணவு திட்டம் முதற்கட்டமாக 2022 செப்டம்பர் 15 அன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. இது அனைத்து தரப்பு மக்களாலும் வரவேற்புக்கு உள்ளாகியிருக்கிறது

இதன் மூலம் அரசு பள்ளி பயிலும் மாணவர்களுக்கு காலை உணவு வழங்குவதிலும் தமிழ்நாடு இந்தியாவுக்கே முன்னோடி என்னும் வரலாற்று பெருமையை பெற்றுள்ளது மாணவர்களின் ஊட்டச்சத்து தேவைகளை கணக்கில்கொண்டு. தினமும் வழங்கப்படும் உணவில் பருப்பு தானியங்கள் காய்கறிகள் ஆகியவை இருக்கும்படி திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது

இத்திட்டம் செயல்படுத்தப் பட்ட 1319 பள்ளிகளில் மாணவர் சேர்க்கை கடந்த ஓராண்டில் அதிகரித்து இருப்பதாக அரசு தெரிவித்துள்ளது. இந்நிலையில் 2023 ஆகஸ்ட் 25 அன்று, தொடக்க கல்வி பயிலும் லட்சக்கணக்கான மாணவர்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டம் விரிவு படுத்தப்பட்டுள்ளது.

திருக்குவளையில் முன்னாள் முதல்வர் மு.கருணாநிதி பயின்ற ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் காலை உணவு திட்டத்தை தொடங்கி வைத்துப் பேசிய முதலமைச்சர் ஸ்டாலின் மாணவர்கள் கல்வி கற்க எந்தத் தடையும் இருக்கக்கூடாது என்பதற்காகவே இந்த திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்

காலை உணவு திட்டத்திற்கு ஆண்டுக்கு ரூ.404 கோடி செலவாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. மாணவர்கள் ஆர்வத்துடன் கற்று முன்னேறுவதை இலக்காகக் கொண்ட இத்திட்டத்திற்கு செலவழிக்கப்படும் தோகை முதலீடாகவே பார்க்கப்பட வேண்டும் அதே போல சத்துணவு திட்டத்தில் கடந்த 30 ஆண்டுகளாக பணியாற்றி வரும் சத்துணவு ஊழியர்களை இந்த திட்டத்தில் சேர்த்து அவர்கள் பணி நிரந்தரம் செய்வதன் மூலம் சத்துணவு ஊழியர்களின் நீண்ட ஆண்டு கோரிக்கை தீர்க்கப்படும். அவர்கள் மூலமாக இந்த திட்டம் விரிவு படுத்தப் பட்டால் அது இன்னும் சிறப்பானதாக இருக்கும்.

வரவு செலவு கணக்கு களுக்கு அப்பாற்பட்டு மாணவிகள் பசியைப் போக்குவதற்கு சத்தான உணவுகளை அவர்களுக்கு வழங்குவதற்கு சத்துணவு ஊழியர்களை ஈடுபடுத்துவதிலும்

அரசு முன்னுரிமை அளிக்க வேண்டும். இந்த செலவுகளை செலவாக பார்க்காமல் அது இந்த சமுதாயத்தின் மேம்பாட்டிற்கான மூலதனமாக பார்க்க வேண்டும்.

அதே நேரம் இந்த காலை உணவு திட்டத்தை நடுநிலை உயர்நிலை பள்ளி மாணவர்களுக்கும் விரிவுபடுத்துவதற்கும் அரசு பரிசீலிக்க வேண்டும் அதோடு தற்போது சத்துணவு ஊழியர்களை நிரந்தரப் பணியாளர்கள் ஆக்கி அவர்கள் மூலம் இந்த திட்டத்தை மேலும் விரிவுபடுத்தி வழங்கப்படும் உணவுகளின் தரம் சத்துக்களின் உள்ளடக்கம் சிறப்பானதாக எப்போதும் தொடர்வதில் அரசு கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். வழங்கப்படும் மதிய நேர சத்துணவில் தரம் நிரந்தரமாக இருப்பதோடு அதில் உள்ள பிரச்சினைகளை களைய வேண்டும் கூடவே அரசுப் பள்ளிகளின் சோதனைகளும் வேதனைகளும் நீக்கப்பட வேண்டும்

ஒரு ஏடு இந்த திட்டத்தை மிக்க கொச்சைப்படுத்தி ஏழை மாணவர்கள் கல்வி பெறுவதை "மலம் நிறைய வரும்" என்று வன்மமாக சித்தரித்து காட்டியுள்ளது. இவற்றுக்கெல்லாம் அடிபணியாமல் சமுதாயத்தை தமிழ்நாட்டை முன்னுக்குக் கொண்டு வருவதில் எல்லோரும் கடமையாற்ற வேண்டும். இந்த திட்டத்தை ஏழைகள் மட்டுமல்லாமல் பொது மக்கள் எல்லோரும் வரவேற்றுள்ள இந்த சூழ்நிலையில் தற்போது பெரிய பெரிய உயரதிகாரிகள் அதிகாரிகளாக அரசுத் துறையில் இருப்பவர்கள் கூட அந்த காலத்தில் காமராஜர் கொண்டு வந்த மதிய உணவு திட்டத்தில் உணவு உண்டு பெரிய தலைசிறந்த தலைவர்களாகவும் நிர்வாகிகளாக உருவெடுத்துள்ளதை மறந்துவிடக்கூடாது. பிற மாநிலங்களை ஒப்பிடுகையில் தமிழகம் கல்வியிலும், பெண்கள் உரிமையிலும், பெண்கள் மேம்பாட்டிலும் முன்னோடியாகத் திகழ்ந்து வருவதை போல, பள்ளி மாணவர்களுக்கு இரண்டு வேளை உணவு என்பது நிச்சயம் இந்த தமிழ் சமுதாயத்தை மேம்பட்டதாக, கம்பீரமாகக் மாற்றும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ●

# "தமிழ்நாடு நில அளவை அலுவலர்கள் கோரிக்கைகள் ஒவ்வொன்றாக நிறைவேற்றப்படும்!"

## தமிழ்நாடு வருவாய் துறை அமைச்சர் உறுதி

தமிழ்நாடு நில அளவை அலுவலர்கள் ஒன்றிணைப்பின் மாநில செயற்குழு 26.08.2023 சனிக்கிழமை விருதுநகரில் மாநில தலைவர் திரு. ஜெ. ராஜா தலைமையில் நடைபெற்றது. விருதுநகர் மாவட்ட தலைவர் திரு. மாரிமுத்து அனைவரையும் வரவேற்று பேசினார். தமிழ்நாடு முழுவதும் இருந்து 600க்கும் மேற்பட்ட ஒன்றிணைப்பின் மாவட்ட கோட்டக் கிளை பொறுப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். கடந்த கால நடவடிக்கை தொடர்பான அறிக்கையினை பொதுச்செயலாளர் அண்ணா. குபேரன் சமர்ப்பித்தார். வரவு செலவு அறிக்கையினை மாநில பொருளாளர் ஞா. ஸ்டேன்லி சமர்ப்பித்தார்.

இக்கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, செயற்குழுவில் வைக்கப்பட்ட கோரிக்கைகள் அனைத்தையும் விரிவாக கேட்டு அவை அனைத்தும் ஒன்றன்பின் ஒன்றாக நிறைவேற்றப்படும் என்கிற உத்தரவாதத்தை வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

நில அளவைப் பதிவேடுகள் துறை கூடுதல் இயக்குனர் அ. கண்ணபிரான், மதுரை மண்டல துணை இயக்குனர் மு. வெங்கடேசன், தமிழ்நாடு கணிக வரைவாளர் ஒன்றிணைப்பின் மாநில தலைவர் திரு. முத்துராஜா ஆகியோர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.

மாநில செயற்குழுவில் 36 மாவட்ட பிரதிநிதிகள் ஆக்கப்பூர்வமான விவாதங்களை முன்வைத்தனர் கூட்டத்தில் தமிழ்நாடு நாடு முழுவதும் நவீன மறு நில அளவைத் திட்டம் துவக்கப்பட வேண்டும், தரம் இறக்கப்பட்ட குறுவட்ட அளவர் பதவியை தரம் உயர்த்தி தகுதி உள்ள நில அளவர்களுக்கு உடனடியாக பதவி உயர்வு வழங்க வேண்டும், துணை ஆய்வாளர் ஆய்வாளர் ஊதிய முரண்பாட்டை களைய வேண்டும், குறுவட்டங்களுக்கு இரண்டு புல உதவியாளர்களை பணி நியமனம் செய்ய வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டு அமைச்சரிடம் வழங்கப்பட்டது. இறுதியாக விருதுநகர் மாவட்ட செயலாளர் கார்த்திக் நன்றி கூறினார். ●

# வீறு கொண்டெழுந்த வருவாய்த்துறை அலுவலர்கள்

**- எம்.பி.முருகையன்**

வரலாறு படைத்த கள்ளக்குறிச்சி காத்திருப்பு போராட்டம், கடமையைச் செய்யும் அரசு ஊழியரை அதிகார வர்க்கம் துச்சமென நினைத்து பலிகடா ஆக்கினால், உழைக்கும் வர்க்கம் என்ன செய்யும் என்பதை தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம் மற்றொரு முறை பிரகடனம் செய்துள்ளது.

கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் பகுதியில் ஆதிதிராவிடர் நலம் அரசு நிலத்தில் பொது பயன்பாடிற்கான இடத்தில் தனி நபர்கள் மேற்கொண்ட ஆக்கிரமிப்புகளை, நீதிமன்ற தீர்ப்பினைத் தொடர்ந்து அகற்றம் செய்த வட்டாட்சியர் திரு.மனோஜ் முனியன் என்பவரை கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஷர்வன் குமார், இ.ஆ.ப., அவர்கள் ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் திரு.வசந்தம் கார்த்திகேயன் அவர்களின் தூண்டுதலின் பேரில் இடைக்கால பணிநீக்கம் செய்தது தமிழகம் முழுவதும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. தமிழக அரசின் ஆதிதிராவிடர் நலத்துறை கூடுதல் அரசு தலைமைச் செயலாளர் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் நீதிமன்றம் ஆக்கிரமிப்புகளை அகற்ற உத்திரவிட்டும் அகற்றாததால், அவர்கள் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டது. இவ்வழக்கில் வழங்கப்பட்ட காலக்கெடுவிற்குள் அக்கிரமிப்புகளை அகற்றிட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் வழங்கப்பட்ட உத்திரவுகளை அமல்படுத்திய வட்டாட்சியருககு; நேர்ந்த நிலை, ஒட்டுமொத்த அரசு ஊழியர்களுக்கு அரசு நிர்வாகத்தின் மீதான நம்பிக்கையை இழக்கச் செய்தது.

அரசியல் தலையீட்டின் காரணமாக வட்டாட்சியர் இடைக்கால பணிநீக்கம் செய்யப்பட்டதை இரத்து செய்ய வலியுறுத்தி தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க கள்ளக்குறிச்சி மாவட்ட நிர்வாகிகள் மாவட்ட ஆட்சியரைச் சந்தித்து சுமார் இரண்டு மணிநேரம் பேச்சுவார்த்தை நடத்தியும் சுமூகத் தீர்வு ஏற்படாததால், கடந்த 14.8.2023 அன்று கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தர்ணா போராட்டம் நடத்தினர். எழுச்சியாக நடைபெற்ற இப்போராட்டத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், தமிழ்நாடு கிராம நிருவாக அலுவலர் முன்னேற்ற சங்கம், தமிழ்நாடு கிராம நிர்வாக அலுவலர் சங்கம், தமிழ்நாடு கிராம உதவியாளர்கள் சங்கம் உள்ளிட்ட பல்வேறு தோழமைச் சங்க நிர்வாகிகளும், உறுப்பினர்களும் திரளாகக் கலந்து கொண்டு தங்களது ஆதரவினைத் தெரிவித்தனர். இப்போராட்டத்திற்கு முன்பாக தமிழ்நாடு வருவாயத்துறை அலுவலர் சங்க மாநில மையத்தின் சார்பில் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடன் அரை மணி நேரம் பேசியும் மாவட்ட ஆட்சியரின் நிலைப்பாட்டில் சிறிதளவு மாற்றம் கூட ஏற்படவில்லை.

மாவட்ட நிர்வாகத்தின் அணுகுமுறையில் சுமூக நிலை இல்லாததைக் கருத்தில் கொண்டும், பாதிக்கப்பட்ட அலுவலரை மீண்டும் பணியமர்த்திட வலியுறுத்தியும் மாநில அளவில் இரண்டு கட்டப் போராட்டங்களை அறிவித்தது மாநில மையம். இதன்படி முதற்கட்டமாக 25.8.2023 அன்று தமிழகத்தின் அனைத்து மாவட்ட மற்றும் வட்டத் தலைநகரில் எழுச்சியான கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தமிழ்நாட்டின் அனைத்து வருவாய்த்துறை அலுவலகங்கள் முன்பாக கண்டனப் பதாகைகள் வைக்கப்பட்டன. ஆர்ப்பாட்டத்தில் அனைத்து மாவட்டங்களைச் சேர்ந்த வட்டாட்சியர் முதல் அலுவலக உதவியாளர் வரை அனைவரும் கலந்து கொண்டு தங்களது உணர்வுகளை வெளிப்படுத்தினர்.

திரு.மனோஜ் முனியனின் இடைக்கால பணிநீக்கத்தை இரத்து செய்திட வலியுறுத்தி வருவாய் நிருவாக ஆணையர், வருவாய்த்துறை அரசு செயலாளர், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் ஆகியோரிடம் தொடர்ந்து வலியுறுத்தியும் யாருடைய பேச்சையும் கேட்காமல் ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினரின் பேச்சை மட்டுமே கேட்பேன் என்றுள்ள கள்ளக்குறிச்சி மாவட்ட

ஆட்சியர் அவர்களின் நடவடிக்கைகள் விசித்திரமானது, நியாயமற்றது. பழிவாங்கும் நடவடிக்கையை இரத்து செய்திட 3 வாரங்கள் தொடர்ந்து போராடிய நிலையில் மாநிலம் தழுவிய இரண்டாம் கட்ட போராட்டமான, கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 5 மாவட்டங்களைச் சேர்ந்த வருவாய்த்துறை அலுவலர்களின் காத்திருப்பு போராட்டத்தை நடத்திட வருவாய்த்துறை அலுவலர்கள் தள்ளப்பட்டனர். வருவாய்த்துறை அலுவலர்களின் போராட்டங்களுக்கு முன்பாக மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் சங்க நிர்வாகிகளை அழைத்து பேசி சுமூக சூழ்நிலை ஏற்படுத்துவது பொதுவான வழக்கம். ஆனால், தொடர் போராட்டங்கள் நடைபெற்ற நிலையிலும் கள்ளக்குறிச்சி மாவட்ட நிர்வாகம் அழைக்காததால், காத்திருப்பு போராட்டத்திற்கு முன்பாக மாவட்ட ஆட்சியரை தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாநில நிருவாகிகள் நேரில் சந்தித்து பேசினர். தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்திற்கு பேச்சுவார்த்தைகளில் எப்போதும் முழு நம்பிக்கை உள்ளதெனவும், போராடும் ஊழியர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து இடைக்கால பணி நீக்கத்தை விரைவில் இரத்து செய்திட வேண்டும் என மீண்டும் வலியுறுத்தப்பட்டது. ஊழியர்களின் கோரிக்கையை சற்றும் ஏற்காத மாவட்ட ஆட்சியர் தொடர்ந்து ஆணவத்தோடு செயல்பட்டு வந்தார்.

எனவே, திட்டமிட்டபடி 29.8.2023 அன்று பிற்பகல் 3 மணிக்கு காத்திருப்பு போராட்டம் தொடங்கியது. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முன்பாக திரண்டிருந்த கள்ளக்குறிச்சி மாவட்ட தோழர்களோடு விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை மற்றும் சேலம் மாவட்ட வருவாய்த்துறை அலுவலர்களும் திரளாக வந்து சேர்ந்தனர். ஜனநாயகரீதியாக, அறவழியில் பேராட்டம் நடத்திட அனுமதி அளிக்காமல் கள்ளக்குறிச்சி மாவட்ட காவல்துறையை ஏவி போராட்டத்தை நசுக்க முயன்றனர். திரண்டிருந்த ஊழியர்களை உள்ளே செல்ல அனுமதிக்காமல், வளாகத்திற்கு உள்ளிருந்து ஊழியர்களை வெளியே செல்ல அனுமதிக்காமலும் போலிசாரின் கைப்பாவை நடவடிக்கைகள் தொடர்ந்தது.

கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் 300க்கும் மேற்பட்ட வருவாயத்துறை அலுவலர்கள், தங்களது நியாயமான கோரிக்கையை வலியுறுத்தி அறவழியில் காத்திருப்பு போராட்டம் நடத்தி வந்த நிலையில், இரவு 8 மணியளவில் அனைவரையும் கைது செய்வதாக கள்ளக்குறிச்சி காவல்துறை அறிவித்தது. தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், ஊழியர்கள், பெண் தோழர்கள் என 300க்கும் மேற்பட்டோரைக் கைது செய்து திருமண மண்டபத்தில் அடைத்தனர். மாநிலத் தலைவர் எம்.பி.முருகையன், பொதுச்செயலாளர் சு.சங்கரலிங்கம், மாநிலப் பொருளாளர் வெ.சோமசுந்தரம், மாநில நிர்வாகிகள் ஏ.மணிகண்டன், வெ.அர்த்தநாரி, ஆ.தமிழரசன், கள்ளக்குறிச்சி மாவட்டத் தலைவர் காதர்அலி, மாவட்டச் செயலாளர் அனந்தகிருஷ்ணன் மற்றும் விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை, சேலம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த நிர்வாகிகளும் ஊழியர்களும் கைது செய்யப்பட்ட செய்தி காட்டுத் தீ என தமிழகம் முழுவதும் பரவியது. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கள்ளக்குறிச்சி மாவட்டத் தலைவர் மகாலிங்கம் உள்ளிட்ட தோழமைச் சங்க நிர்வாகிகளும் சிறைப்பிடிக்கப்பட்டனர்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பெண் தோழர்கள் தாமாக முன்வந்து கைதானது போராட்டத்தின் வெற்றி திருப்பமாக அமைந்தது. காவல்துறை மூலமாக ஜனநாயக வழியில் போராடியவர்களின் குரல்வளையை நெறிப்பதை அனுமதிக்க முடியாது என ஒட்டுமொத்த அலுவலர்களும் வெகுண்டெழுந்தனர். அனைத்து மாவட்ட மையங்களும் கண்டனம் தெரிவித்ததோடு, மாநிலம் தழுவிய இயக்கதிற்கு அறைகூவல் விடுத்திட வலியுறுத்தினர். சில மாவட்டத் தோழர்கள் கள்ளக்குறிச்சி நோக்கி படையெடுக்க அனுமதிகோரினர்.

கைது செய்து அடைக்கப்பட்ட மண்டபத்திலேயே இரவு உணவிற்கு பின்பாக மாநில நிருவாகிகளின் அவசர ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் வரலாறு காணாத அதிகார அத்துமீறல் செய்து வரும் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் திரு.ஷ்ரவன் குமார் இ.ஆ.ப., அவர்களின் ஊழியர் விரோத நடவடிக்கைகளைக் கண்டித்தும், போராடும் ஊழியர்களையும் பெண் ஊழியர்களையும் அராஜகமாக கைது செய்தமைக்கும் கண்டனங்கள் எழுப்பப்பட்டன.

தமிழகத்தின் 14000 ஊழியர்களின் உணர்வுகளைக் கருத்தில் கொண்டு, 30.8.2023 தமிழகத்தின் அனைத்து வருவாய்த்துறை அலுவலர்களும் தங்கள் பணிகளைப் புறக்கணித்து மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு முன்பாக காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபடுவதென ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது. நள்ளிரவில் அறிவிக்கப்பட்ட முடிவுகளைக் களத்தில் அமல்படுத்த காத்திருந்த வருவாய்த்துறை அலுவலக சங்க சேனைகள் வில்லிலிருந்து புறப்பட்ட அம்பாக செயல்பட்டனர். மறுதினம், 30.8.2023 தமிழகத்தின் அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களும், வட்டாட்சியர் அலுவலகங்களும் போர்க்களம் போல் காட்சியளித்தது. கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியரின் அதிகார மமதைக்கு எதிராகவும், அரசு நிர்வாகத்தில் அரசியல்வாதிகளின் தலையீடுகளுக்கு எதிராகவும், பாதிக்கப்பட்ட ஊழியரின் இடைக்கால பணிநீக்கத்தை இரத்து செய்திட வலியுறுத்தியும் தமிழகம் முழுவதும் ஆர்ப்பரித்து கோஷங்கள் ஒலித்தன. தமிழக அரசின் சிறப்பு திட்டமான கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டப்பணிகளைப் போதிய கால அவகாசம், நிதி ஒதுக்கீடு மற்றும் கூடுதல் பணியிடங்களின்றி இரவு பகலாக மேற்கொண்டு வந்த வருவாய்த்துறை அலுவலர்கள் அப்பணிகளைப் புறக்கணித்து அலுவலக வாயிலில் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டது ஊடகங்களில் வைரலானது. வட்டப் பொறுப்பு வட்டாட்சியர்கள், அலுவலக மேலாளர்கள் உள்ளிட்ட அனைத்து நிலை அலுவலர்களும் அலுவலக வாயிலில் கோஷமிட்டு அமர்ந்திருந்தனர்.

தமிழகத்தின் சமூக ஊடகங்களில் தொடர்ந்து செய்தி வந்து கொண்டிருந்த நிலையில் போராட்ட வீரியத்தின் காரணமாக சங்க நிர்வாகிகள் சென்னைக்கு அழைக்கப்பட்டனர். தமிழ்நாடு வருவாய்த்துறை அலுலவர்களின் வீரம் செறிந்த போராட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலையீட்டின் காரணமாக வட்டாட்சியரின் இடைக்கால பணிநீக்க ஆணைகளை இரத்து செய்திட உறுதியளிக்கப்பட்டது. உடனடியாக பணிநியமனம் வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டதைத் தொடர்ந்து அனைத்து போராட்டங்களும் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டன. வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின மாநில நிர்வாகிகள் சென்னையில் முகாமிட்டு இப்பணிகளைக் கண்காணித்தனர். இதன் பலனாக மறுதினமே மனோஜ் முனியனின் இடைக்கால பணிநீக்கம் இரத்து செய்யப்பட்டு மீண்டும் வட்டாட்சியராக பணியில் சேர்ந்தார். இவர் தனது உயிர் உள்ளவரை சங்கத்தை மறக்க மாட்டேன் என உருக்கத்தோடு நன்றி தெரிவித்தார்.

ஒன்றுபட்ட ஊழியர் இயக்கங்களுக்கு முன்பாக அதிகார மமதை கொண்ட ஆட்சியரின் ஆணவங்கள் தகர்ந்தன. தமிழகத்தில் இயல்பு நிலைக்கு வித்திட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கபட்டதோடு, அரசு ஊழியர்களைத் தவறாக கையாண்டு அரசிற்கு பெரும் களங்கத்தை ஏற்படுத்திய மாவட்ட ஆட்சியர் திரு.ஷர்வன் குமார், இ.ஆ.ப., அவர்கள் மீது விரிவான விசாரணை நடத்தி தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

பணியில் சேர்ந்த நாள் முதல் ஊழியர் விரோத நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வரும் மாவட்ட ஆட்சியரின் ஆணவத்திற்கு தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர்கள் தக்க பாடம் புகட்டினர். இவர் மட்டுமில்லாது சக ஊழியர்களை அடிமைகளாக நடத்த நினைக்கும் அதிகார வர்க்கத்திற்கும், அரசு நிர்வாகத்தில் அத்துமீறி தலையிடும் அரசியல்வாதிகளுக்கும் தக்க எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. நியாயமான உரிமைகளுக்காக போராடிய மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள் மற்றும் ஊழியர்கள் மீது நயவஞ்சகத்தோடு பொய்வழக்கு புனைந்துள்ளதை தீரத்தோடு எதிர்கொள்வோம்.

ஒன்றுபட்ட இயக்கத்தின் முன்பாக அடக்குமுறைகள் சிதறுண்டு போகும். தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம், தனது வைரவிழா (60ஆம்) ஆண்டில் ஊழியர் நலன் காக்கும் அமைப்பு என்பதையும், ஆணவம் கொண்ட அதிகாரிகளுக்கு எதிராக தொடர்ந்து குரல் எழுப்பும் இயக்கம் என்பதையும் மற்றொருமுறை பிரகடனம் செய்துள்ளது.

இப்போராட்டதிற்கு தோளோடு தோள் நின்று ஆதரவளித்த தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் உள்ளிட்ட அனைத்து தோழமைச் சங்கங்களுக்கும் உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். ●

கட்டுரை

# கிராம சுகாதார செவிலியர்களை கணினி இயக்குநர்களாக மாற்றுவதை கைவிடுக!

**– C.பரமேஷ்வரி**

கிராம சுகாதார செவிலியர்கள் கடைகோடி கிராம மக்களுக்கும் சுகாதாரத்தை கொண்டு சேர்ப்பதற்காக கிராம புறங்களில் பணியமர்த்தப்பட்டார்கள். வழித்தடம் இல்லாத இடத்தில் வழித்தடம் உருவாக்கி மலை பகுதியில் வசிக்கும் மக்களுக்கும், கிராம புற மக்களுக்கும், காடு மேடு கடந்து சுகாதாரத்தை கொண்டு சேர்ப்பவர்கள் கிராம சுகாதார செவிலியர்கள். அவர்கள் உருவாக்கிய வழித்தடம் தான் தற்போது பேருந்து செல்லும் தடமாக உருவாகியுள்ளது. கிராம சுகாதர செவிலியர்களின் கால் தடம் பதித்த இடங்கள் தான் இன்று கிராமங்களாக அழகு நயத்தோடு இருக்கிறது. காடு மேடுகளில் வசிக்கும் மக்களுக்கும் தாய் சேய்க்கும் சுகாதரத்தை கொண்டு சேர்த்து வெற்றிக் கண்டவர்கள் அவர்கள்.

துறையில் தாய் சேய் நலன் சார்ந்த அறிவிப்புகள் எவ்வளவு சிரமமானதாக இருப்பினும் (தட்டம்மை, ரூபெல்லா தடுப்பூசி பணி, கொரோனா 19 தடுப்பூசி பணி,காலரா,டெங்கு மலேரியா. கொரோனா 19 நோய் ஒழிப்பு பணி, ஒக்கி புயல்,கஜா புயல், சுனாமி போன்ற பேரிடர் காலங்களிலும்) தமது உயிரை பணயம் வைத்து மக்களோடு மக்களாக சிறப்பாக மக்கள் சேவை செய்தவர்கள் கிராம சுகாதார செவிலியர்கள். கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக கிராம மக்களின் சுகாதாரத்தையும், தாய், சேய் சுகாதாரமான பிரவசம், குடும்ப நலப்பணி, PICME என்னும் கணினி பணி என இடைவிடாமல் ஓடி கொண்டிருக்கும் கிராம சுகாதார செவிலியர்களுக்கு பணிப் பாதுகாப்பு இல்லை. மன அழுத்தத்தோடு பணிப்புரிந்து கொண்டிருக்கும் கிராம சுகாதார செவிலியர்களை அரசும், பொதுசுகாதார துறையும் U.WIN செயலி, Google Sheet ல் அறிக்கை தயாரித்துக்கொண்டு துணை இயக்குநர் அலுவலகத்திற்கு வரவேண்டும் என அச்சுறுத்தப்படுகிறார்கள். கிராம சுகாதார செவிலியர்களை நிர்வாகம் அவர்களது பணியை செய்யவிடாமல் கணினி இயக்குநராக மாற்ற தயாராகி வருவதை கண்டித்து மாவட்ட அளவில் கோரிக்கை அட்டை கறுப்பு பேட்ஜ் அணிந்து பணிபுரிதல் மற்றும் கண்டன ஆர்ப்பாட்டமும் நடத்தப்பட்டது. ஆனால் அரசும் துறையும் செவிசாய்க்கவில்லை எனவே 18/08/2023 அன்று காணொளி மூலம் மாநில நிர்வாகிகள் கூட்டம் நடத்தப்பட்டது. அதன் அடிப்படையில் 28/08/2023 அன்று சென்னை ராஜரத்தினம் ஸ்டேடியத்தில் மாநில மாவட்ட நிர்வாகிகள் உண்ணாவிரதம் நடத்துவது என முடிவு செய்யப்பட்டது. அதற்கு முன்பு 21/08/2023 அரசுக்கும் துறைக்கும் கடிதம் வழங்கப்பட்டது. 22/08/2023 துறை இயக்குநர், கிராம சுகாதார செவிலியர்களை அலுவலக நேரம் தவிர்த்து மற்ற நேரங்களில் துணை இயக்குநர் அலுவலகத்திற்கு வரவழைக்கக் கூடாது என்றும் ஆய்வு கூட்டம் காலம் தாழ்த்தி நடத்தக் கூடாது என்பன உள்ளிட்ட 5 அம்ச அறிவுறுத்தல்கள்



“சின்ன சின்ன ஆசை...
தென்துருவம் செல்ல ஆசை...
பாட்டி சுடும் வடையை
ருசித்துப் பார்க்க ஆசை...
சேட்டன் கடை சாயா
குடித்துப் பார்க்க ஆசை...”

அடங்கிய ஆணையை அனைத்து துணை இயக்குநர்களுக்கு வழங்கியதோடு பத்திரிக்கையிலும் செய்தி வெளியிட்டார். இது கிராம சுகாதார செவிலியர்களின் போராட்டத்திற்கு அறிவிப்பிற்கு கிடைத்த வெற்றியாகும். திட்டமிட்டப்படி 28/08/2023 அன்று சென்னை ராஜரத்தினம் ஸ்டேடியத்தில் மாநில மாவட்ட நிர்வாகிகள் உண்ணா நிலை போராட்டம் நடைபெற்றது. உண்ணா நிலை போராட்டத்தை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில தலைவர் தோழர் அன்பரசு அவர்கள் எழுச்சியோடு துவக்கி வைத்தார்.தோழமை துறைவாரி சங்க தலைவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். உண்ணாவிரத பந்தலில் இருக்கும் போதே அரசு பேச்சுவார்த்தைக்கு அழைத்தது. காவல் துறை வாகனத்தில் மாநில நிர்வாகிகள் மரியாதைக்குரிய அரசு முதன்மை செயலாளர் மருத்துவம்- மக்கள் நல்வாழ்வு துறை அவர்களிடம் பேச்சு வார்த்தைக்கு அழைத்து சென்றார்கள்.

பேச்சுவார்த்தையின் போது ஏற்கனவே PICME செயலி மூலம் தாய் சேய் நலப்பணிகளை கிராம சுகாதார செவிலியர்கள் செய்து கொண்டிருக்கின்றோம். தற்போது U.WIN செயலி மூலம் தடுப்பூசி பணியினை செய்வது கடினம் இந்த செயலியில் குழந்தைகள் தடுப்பூசிக்கு வரும் போது அவர்களது பெற்றோர் (தாய்) ஆதார் எண்ணை பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்தவுடன் அவரது கைப்பேசி எண்ணுக்கு வரும் கடவு சொல்லை (OTP) பதிவு செய்ய வேண்டும். தடுப்பூசி பணியினை மேற்கொள்வதால் நேரம் அதிகமாகும். தடுப்பூசி மருந்தினை உரிய வீரியத்துடன் செலுத்துவதில் பிரச்சனைகள் ஏற்படும் என்பதை எடுத்துரைத்தோம். அதோடு காலி பணியிடங்களை நிரப்ப வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. மரியாதைக்குரிய அரசு முதன்மை செயலாளர் மருத்துவம்-மக்கள் நல்வாழ்வு துறை அவர்கள் இயக்குநருடன் கலந்தாலோசித்து தீர்க்கமான தீர்வு அளிப்பதாக தெரிவித்தார். அதனடிப்படையில் கடந்த 01/09/2023 அன்று இயக்குநர் மத்திய அரசுக்கு, "கிராம சுகாதார செவிலியர்கள் ஏற்கனவே PICME இணையதளத்தில் கர்ப்பிணிகள், குழந்தைகளுக்கு தடுப்பூசி பணியினை 100% செய்கிறார்கள். அதனால் PICME யை U.WIN இணையத்துடன் இணைக்க வேண்டும் என்றும் இவற்றை தனித்தனியே கையாள்வதன் மூலம் மிகுந்த பணிச் சுமைக்கு ஆளாகி அதன் காரணமாக கிராம சுகாதார செவிலியர்கள் உண்ணாவிரத போராட்டம் நடத்தும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். அவர்கள் பணி சுமையை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்." என்று மத்திய அரசுக்கு கடிதம் எழுதி குறிப்பிட்டு இருந்தார்.

தமிழ் நாடு அரசு ஊழியர் அங்கத்தின் வழிக்காட்டுதலின்படி கிராம சுகாதார செவிலியர்கள் நடத்திய உண்ணாவிரத போராட்டம் அவர்களின் பணி சுமைகளை குறைக்க உதவியுள்ளது. கிராம சுகாதார செவிலியர்கள் பணி சுமையில் இருக்கிறார்கள் என்று அரசும் துறையும் வெளிப்படுத்தியது சிறப்பு.

ஆரம்ப சுகாதார கவனிப்பு அல்லது முதல் நிலை சுகாதார கவனிப்பை மேம்படுத்துவதன் மூலம் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் அனைத்துலக பிரகடனம் 1978 அல்மா ஆட்டா பிரகடனத்தின்படி அனைவருக்கும் ஆரம்ப சுகாதாரம் உறுதி செய்யப்படும் என்பதை தமிழ் நாட்டில் கிராம சுகாதார செவிலியர்கள் நிலை நாட்டி வருகிறார்கள். தங்கள் உரிமையை மீட்டெடுக்க போராடவும் தயாராக இருக்கிறார்கள். எனவே அரசும், துறையும் U.WIN செயலியை கிராம சுகாதார செவிலியரிடம் திணிப்பதை கைவிட்டு கிராம சுகாதார செவிலியர்களை கணினி இயக்குபவராக மாற்றாமல் செவிலியர் பணியை செய்ய அனுமதிக்க வேண்டும். ●

Printed and Published by M. Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A. SELVAM . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com